பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

Selliah Sivapathalingam
GEM & JEWELS MERCHANT
218H Kasthuriar Road, JAFFNA.
T. Phone: 23794

உதயன்

விலை ரூ 2/50

செல்லையா சிவபாதலிங்கம்
தங்க வைர நகை வியாபாரம்
218 H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஒடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில்செய்து கொடுக்கப்படும்.

கடிர்: 4 சுக்கில ஷு மீ ஆவணி 04 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 17 (20 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 221

தெற்கில் நிலைமை மோசமடைகிறது!

பொதுச்சேவைகளைக் குழப்பி நெருக்கடியை ஏற்படுத்த முயற்சி!

கொழும்பு, ஆகஸ்ட் 20

தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிராக பாரிய அளவில் கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட தீவிரவாத அமைப்புகள் முஸ்தீபு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவில் நிர்வாகத்தைக் குலைத்து, பொதுச்சேவைகளைக் குழப்பி அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்த முயற்சி செய்யப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கும், அரச நிர்வாகத்திற்கும், அரச படைகளுக்கும் எதிராக அடுத்த சில தினங்களில் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் ஆஸ்பத்திரிச் சேவைகள் முற்றாக விதம்பித் திருப்பது தெரிந்ததே.

நேற்று ரயில் மற்றும் போக்குவரத்து சேவைகளும் செயலிழந்தன. ரயில்வே ஊழியர்கள் நேற்று திடீரென வேலைக்குத் திரும்பத் தவறியதன் காரணமாக ரயில் சேவைகள் சீர்குலைந்ததாக ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை இன்று முதல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஜே.வி.பி உட்பட சகல கட்சிகளையும் கொண்ட

அரசியல் நிர்ணய சபை அமைக்க ஜனாதிபதி தயார்!

ஆனால் முதலில் அமைதிவர வேண்டுமாம்

கொழும்பு, ஆக: 20

தேவை ஏற்படின் புதிய அரசமைப்பு ஒன்றைத் தயாரிப்பதற்கு வசதியாக— ஜே: வி: பி. உட்பட சகல அரசியற் கட்சிகளையும் கொண்ட— அரசியல் நிர்ணய சபை ஒன்றை என்னால் நியமிக்க முடியும்:

ஆனால் அதற்கு, முதலில் நாட்டில் அமைதி திரும்ப வேண்டும்:

— இவ்வாறு ஜனாதிபதி ஆர்: பிரேமதாஸா அறிவித்திருக்கிறார்:

கம்பஹாவின் முன்னாள் எம்: பி', எஸ். டி: பண்டாரநாயக்காவின் தலைமையில் இலங்கை முன்னேற்ற முன்னணியின் தூதுக் குழு ஒன்று ஜனாதிபதி பிரேமதாஸாவை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியது:

அமைதியை மீண்டும் நிலை நாட்ட பல யோசனைகள் முன்னணி அப்போது ஜனாதிபதி முன்வைத்தது:

★ அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் ஆகியவை நீக்கப்பட வேண்டும்:

★ மக்கள் அபிலாஷைகளு

(8ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

(20 - 8 - 1989)

ஆவணி—4 ஞாயிற்றுக்கிழமை

நக்ஷத்திரம்: உத்தரட்டாதி

சுபநேரம்:

09-05 முதல் 10-35 வரை

ராகுகாலம்:

04-85 முதல் 06-05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்:

சங்கடஹர கணபதி விரதம்

முச்சந்தி முரளி

அரசமைப்பை அடிக்கடி திருத்திச்சினம்: இப்ப அதை அடியோடை மாற்றப் போகினமோ..... ?

எயர் லங்கா விமானக் குண்டு வெடிப்பு வழக்கு:

எதிரிகள் மீது சித்திரவதை! பலாத்காரமாக வாக்குமூலம்!!

மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஆக: 20

எயர்லங்கா த்ரீஸ்டார் விமானக் குண்டு வெடிப்பு வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட எதிரிகளின் வாக்குமூலங்கள் அவர்கள் விரும்பி அளித்தவை அல்ல என்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு: எச்: டபிள்யு: சேனநாயக்கா தீர்ப்பளித்தார்:

எதிரிகளிடமிருந்து பொலீஸார் பெற்ற வாக்குமூலங்கள் சித்திரவதை செய்யப்பட்டு பலாத்காரமாகப் பெறப்பட்டதா அல்லது எதிரிகள் தாமாக விரும்பி அளித்த

(8ஆம் பக்கம் பார்க்க)

மின் விநியோக துண்டிப்பு; பொருளாதாரத் தடையா?

எம். பி. எட்வேட் கேள்வி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 20

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தடை தமிழ் பேசும் மக்கள் மீது விதிக்கப்பட்ட மறைமுக பொருளாதாரத் தடையா— இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணியின் சார்பில் அம் முன்னணியின் எம். பி. திரு: செ. எட்வேட் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

வட-கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒன்றரை மாதங்களாக தடைப்பட்ட மின் சார நிலைமை இன்னமும் தீர்க்கப்படாதது குறித்து இலங்கை ஜனாதிபதியிடமும், மின் சக்தி அமைச்சரிடமும் ஈழவர் ஜனநாயக முன்னணி தனது ஆட்சேபத்தைத் தெரிவித்து இருக்கிறது.

கடந்த ஒன்றரை மாதங்களாக சேதமாக்கப்பட்ட மின் கோபுரங்கள் இன்னமும் திருத்தப்படாததன் மர்மம் என்னவென்று அறிய முன்னணி விரும்புகிறது. வட - கிழக்கு மாகாண மக்கள் அனைவரை

(8ஆம் பக்கம் பார்க்க)

வல்வையை அரச அதிபர் நேற்றுப் பார்வையிட்டார்

வல்வெட்டித்துறை, ஆக: 20

அண்மையில் வல்வெட்டித் துறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது பாதிக்கப்பட்ட இடங்களை யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் திரு: அன்ரன் அன்பிரட் அவரது அதிகாரிகள் சகிதம் நேற்றுச் சென்று பார்வையிட்டார்:

குடும்ப அங்கத்தவர்களை இழந்தோரையும் உடைமைகளை இழந்தோரையும், அவர்கள் சந்தித்து உரையாடினர்:

பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி வல்வைப் பிரமுகர்கள் அரச அதிபரிடம் விளக்கிக் கூறினர்:

அரச அதிபர் ஆவன செய்வதாக உறுதி வழங்கியதாகத் தெரிய வந்தது: (ஒ-160)

பாடசாலைகள் விடயம்; இணைப்பாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 20

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் மாணவர்களைப் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்குமாறு கோரி பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஆ: முருகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்: இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

"இலங்கையின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள கெடுபிடிகள் காரணமாக அரச நிர்வாகம் செயற்பட முடியாத இக்கட்டான நிலையில் இருப்பதால், பாடசாலைகளை நடத்த முடியாது காலவரையின்றி சகல பாடசாலைகளையும் கல்வி அமைச்சு மூடுமாறு உத்தரவிட்டது.

ஆனால் வடக்குக் கிழக்கு மாகாண அரசு தென்னிலங்கை நிலைமைகளுக்காக வடக்குக் கிழக்கு மாணவர்களின் கல்வி பாதிக்கக்கூடாது என்பதைக் கவனத்தில் எடுத்து, எமது மாகாண அரசின் கீழ் இயங்கும் சகல பாடசாலைகளையும் திறக்குமாறு விடுத்த பணிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் வீதித்தடைகள் மாலை 7 மணிக்கே நீக்கப்படும்

யாழ்ப்பணம், ஆக 20

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தை அண்டிய பிரதேச வீதிகளில் போடப்பட்டுள்ள வீதித் தடைகளை இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் இரவு 7 மணிக்குப் பின்னரே நீக்குவது என முடிவாகி உள்ளது.

தற்போது இந்த வீதித் தடைகள் மாலை 6 மணிக்கு அகற்றப்படுகின்றன: அதன் பின்னர் இவ் வீதிகளில் மோட்டார் சைக்கிள் உட்பட ஏனைய வாகனங்கள் செல்வதால் அடியார்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகிறார்கள்

இது குறித்து மாநகரசபையின் கவனத்திக்கு கொண்டு வரப்பட்டது. அதையடுத்து யாழ்ப்பாண: மாநகரசபை ஆணையாளர் திரு. பொ: பாலசிங்கம் இம் முடிவை மேற்கொண்டார்:

இதே வேளை ஆலயத்துக்கு நகைகளை அணிந்து வருவதை பெண்கள் தவிர்க்க வேண்டும் எனவும் ஆணையாளர் கோரியுள்ளார்: (ஒ-10)

திவ்வியநாதன் எம்.பி கொழும்பில் பேட்டி!

கொழும்பு, ஆகஸ்ட் 20

காணாமற்போனதாகக் கூறப்பட்ட எம்: பி. திரு. திவ்வியநாதன் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்திருக்கிறார்:

தனக்கும் தனது இயக்கத்திற்கும் இடையேயான தகராறு சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விட்டதாக அவர் அந்தப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார்:

விரைவில் நாடாளுமன்றத்தில் இது பற்றி அறிக்கை ஒன்றை வெளியிடவிருப்பதாகவும் திரு: திவ்வியநாதன் சொன்னார்.

"தொலைக்காட்சியில் நான் அளித்த பேட்டி தொடர்பாக நான் திருமலை சென்று தலைவர் திரு. செல்வத்திடம் எனது நிலையை விளக்கினேன். எமது அமைப்பின் செயற்குழுக் கூட்டத்திலும் நான் கலந்துகொண்டேன்-என்றார்.

திரு: திவ்வியநாதன் சில தினங்களாகக் காணாமற்போயிருப்பதாக, மனித உரிமைகள் தொடர்பான நாடாளுமன்றக் குழு நாடாளுமன்ற சபாநாயகரிடம் முன்னர் முறைப்பாடு செய்திருந்தது தெரிந்ததே (உ-எ)

அரசுக்கு விசுவாசமாக செயற்பட தளபதிகள் உறுதி

கொழும்பு, ஆக: 20

இலங்கையின் சகல ஆயுதப் படைகளின் தளபதிகளும் அரசுக்கு விசுவாசமாக இருக்கப் போவதாக நேற்று உறுதியளித்தனர்:

ரூபவாஹினி மூலம் இராணுவம், விமானப்படை, கடற்படை, பொலீஸ்படை ஆகியவற்றின் தளபதிகள் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த உறுதிமொழியை வழங்கினர்:

சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட அரசின் உத்தரவுகளை நிறைவேற்றுவதில் இருந்து பின்வாங்கப்போவது இல்லை என்று படைத் தளபதிகள் மேலும் தெரிவித்தனர்:

சகல ஆயுதப்படைகளில் இருந்து வீரர்கள் அனைவரும் இம்மாதம் 20க்கு முன்னர் வெளியேறிவிடவேண்டும்; தவறின் அதனால் ஏற்படும் பலாபலன்களை சந்திக்கத் தயாராக இருக்கும்படி அரசப் படைகளின் வீரர்களுக்கு ஜே. வி. பி. இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது:

இதற்கு பதிலளிக்குமுகமாகவே அரசப் படைகளின் தளபதிகளும் கூட்டாக அரசுக்கு விசுவாசம் தெரிவித்து அறிக்கையை வெளியிட்டனர்: (எ)

யாழ்தேவி சேவையும் இன்று நடைபெறாது

தெற்கில் ரயில்வே ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப மறுத்ததை அடுத்து இன்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு செல்லவிருந்தயாழ்தேவி ரயில் சேவையும் ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது: (உ10)

மாங்குளத்தில் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 20

நேற்றுக் காலை 7 மணியளவில் மாங்குளம்சந்தியில்உள்ள அமைதிப்படை முகாம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது:

துணுக்காய் பகுதியில் இரவு தரிப்புக்காக நிறுத்தப்பட்ட இரண்டுபோக்குவரத்துச்சபை பஸ்களில் ஏறிவந்த ஆயுதபாணிகளே தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது:

இந்தச் சம்பவத்தில் ஜவான் ஒருவரும் தாக்குதலில் ஈடுபட்ட ஆயுதபாணிகளுள் ஒருவரும் உயிரிழந்ததாகச் சொல்லப்பட்டது.

தாக்குதலுக்காக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பஸ்கள் முகாமிற்கு அண்மையில் அனுதரவாக விடப்பட்டிருந்தன. (உ-9)

இரண்டு விடயங்களில் இலங்கை அரசு இணக்கம்

புதுடில்லி ஆகஸ்ட் 20

அமைதிப்படை விலகல் விடயம் தொடர்பாகஇரண்டு விடயங்களில் இலங்கைக்கு இணக்கம் தெரிவிக்க இந்திய அரசு முன் வரலாம் என புதுடில்லி செய்திகள் தெரிவித்தன:

★ முன்னர் கூறப்பட்ட இரண்டு வாரகால யுத்தநிறுத்தத்தை ஒருமாத காலத்திற்கு நீடிப்பது.

★ எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் அமைதிப்படையினர் அனைவரையும் விலக்கிக் கொள்வது:

— இவையே அந்த இரண்டு விடயங்கள் எனத் தெரிவிக்கப்பட்டன. (உ)

நள்ளிரவில் நடமாடியோர் மீது சூடு! சிறுவன் பலி!!

யாழ்ப்பாணம், ஆக 20

நள்ளிரவில் வலிப்பு நோய் கண்ட பிள்ளையை கிடிச்சைக்காக தூக்கிக்கொண்டு முகாமிற்கு முன் பாகச் சென்ற தாய் சூட்டுக்கு இலக்காகினார்.

இந்தச் சம்பவத்தில் ஐந்து வயது மகன் உயிரிழந்தார். தாய் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11ரு 30 மணியளவில் நுணாவில் பகுதியில் இடம்பெற்றது: (உ-9)

மிதி வெடியில் சிக்கி இளைஞர் உயிரிழப்பு!

வட்டக்கட்சி, ஆக. 20

தடிவெட்டுவதற்காக மாட்டுவண்டியில் காட்டுக்குச் சென்ற இளைஞர் ஒருவர் மிதி வெடியில் சிக்கி உயிர் இழந்தார்.

இரணைமடுக்குளத்துக்கு சமீபமாக உள்ள கல்மடுக்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது:

வண்டியை ஓட்டிச் சென்றக: உதயசிறீ (20 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்:

வண்டியில் இருந்த மற்றும் இருவர் சிறு காயங்களுடன் தப்பினர். மாடும் காயம் அடைந்தது: வண்டிலிலும் சேதமுற்றது: (இ-163)

சுட்டுக்கொலை

கரவெட்டி ஆகஸ்ட் 20

கரவெட்டி சாமியன் ஆரடியில் ஒருவர் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார்:

கொலையுண்டவர் கிவியன் என்றழைக்கப்படுபவர் எனத் தெரிவிக்கப்பட்டது:

அதேவேளை தெல்லிபழப்பகுதியில் குண்டுச் சத்தங்களும் வேட்டுச்சத்தங்களும் கேட்டன.

இராஜராமம் பகுதியில் சில வீடுகள் தீயிடப்பட்டுச்சேதமானதாகச் சொல்லப்பட்டது. (ஒ-70)

திருமலையில் நால்வர் பலி!

திருகோணமலையில் விடலம்புத் திட்டம் ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததால் அமைதிப்படை ஜவான்கள் இரண்டு பேரும் ஒரு பொலீஸாரும் பொதுமக்களில் ஒருவரும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது:

இளைய தலைமுறையின் திருப்பம் காவிரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

தேவை

நன்கு அனுபவம் உள்ள சமையல் வேலை செய்யக்கூடியவர்களும், சப்ளை செய்யக் கூடியவர்களும் தேவை: மனையகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் விரும்பத்தக்கது. நேரில் வரவும் கோட்டல் ரோலக்ஸ் 340, ஆஸ்பதி திரி வீதி, யாழ்ப்பாணம்: (1656)

கிறைன்டிங் மில்லில் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள ஆட்கள் தேவை. தங்குமிட வசதி உட்பட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்: பிள்ளையார் கிறைன்டிங்மில், மாவிப்பாய் ரோட், தாவடியுடன் தொடர்பு கொள்ளவும்: (11738)

யாழ் நகரில் பொருட்கள் கொண்டு விற்பனை செய்வதற்கு ரூ. 1000/- பிணைப்பணம் கட்டக்கூடிய பெண் விற்பனையாளர்கள் தேவை: சிறந்த சம்பளம் வழங்கப்படும். வெளியிடத்தோருக்கு இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்: தொடர்பு 577. C/o Uthayan. [1644]

வாடகைக்குத் தேவை

சங்கானை மின்தறி நெசவாலைக்கு, 20 K. V. A., 3 Phase மின் இயந்திரம் (ஜெனரேற்றர்) வாடகைக்கு உடன் தேவை: தொடர்பு:- மின்தறி நெசவாலை T.C. ஒழுங்கை, சங்கானை: (1657)

மணவாளன் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள செவ்வாய்க் குற்றமுள்ள 38 வயது B.Sc Officerக்கும் குற்றமற்ற 36 வயது M. B. B. S. டொக்டருக்கும் தேவை: மங்கள ஏஜென்சி, காய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்: [1635]

மணப் பெண் தேவை

கனடாவில் வேலை செய்யும் 32 வயது கத்தோலிக்க மணமகனுக்கு அங்குள்ள மணப் பெண் தேவை: மங்கள ஏஜென்சி. யாழ்ப்பாணம்: (1397)

விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மண்டேலா ரேடர் [புத்தகசாலை] இல. 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

கோழிக்குஞ்சு விநியோகம்

பன்றம் கோழிகள், குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இ. பரஞ்சோதி 'வசந்தம்' இணுவில் ரோட், மானிப்பாய். (1652)

கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

[Cobb] புரொயிலர் குஞ்சுகள் (23 - 08 - 89) புதனும் (Dekalb) பிறவுன் பேடுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் (30 - 08 - 89) புதனும் விநியோகிக்கப்படும். (தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு:- எங்கள் குஞ்சுகளுக்கு இரவில் கூட் அவசியமில்லை: (1606)

கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புரொயிலர் குஞ்சுகள் ரூபா 15/50, வெள்ளை ரூபா 16/00, பிறவுன் பேடுக் குஞ்சுகள் 13/50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. கால் நடை உணவுகளுக்கும் எம்மை நாடுங்கள்: ஸ்ரீ கிருஷ்ணா ஒயில் ஸ்ரோர்ஸ் 802: பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி. (1372)

வைத்தியம்

தொடர்வு, பாரிசவாதம், குடற்புண், மலச்சிக்கல் நரம்புத் தளர்ச்சி. இது போன்ற நோய்களை யோக வைத்தியத்தின் மூலம் குணமாக்கி நோயற்று வாழ்வீர்களாக. தொடர்பு: V. S. சோமசுந்தரம். 95/14, விடேசன்லேன், யாழ்ப்பாணம்: (1618)

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள வீடியோ, கமரா நாஷனல் "NATIONAL - 100" விற்பனைக்கு உண்டு: தொடர்பு: லதா ரேட் சென்ரர், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்: (1658)

110 H P நாஷனல் ஜெனறேற்றிங் செற் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சென் பீற்றர் ஐஸ் பக்ரறி, முல்லைத்தீவு: (1560)

தமிழ் ரைமிங்டன், ஆங்கிலம் புதிய Facit 18" Standard டைப்ரைட்டர்கள் Typewriters மற்றும் Standard Portables விற்பனைக்கு உண்டு: Fudo 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்: [C/3516]

நல்லநிலையிலுள்ள மொறிஸ் வான் [Van] விற்பனைக்குண்டு. தொடர்பு 120, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி S. P. O. அருகாமையில் யாழ்ப்பாணம்: [1636]

குத்தகைக்கு

யாழ். பெரியகடை வீதியில் 100 சதுரஅடிக் கடைகள் குத்தகைக்கு உண்டு. நேரில் வரவும்: விபரங்களுக்கு:- அங்கலின் ரெக்ஸ்ரைல்ஸ் 43, பெரியகடை, யாழ்ப்பாணம்: (1651)

MUSIC

Piano and Accordian-Lessons for Females Mrs Thomas St. Mary's Road, Sillalai: (1058)

விடுவளவு விற்பனைக்கு

நல்லூர் கல்வியங்காடு 3ஆம் கட்டை மடத்தடி ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடும் அதனுடன் சேர்ந்த ஒற்றைப் பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு அங்கலின் ரெக்ஸ்ரைல்ஸ் 43, நவீனசந்தை, யாழ்ப்பாணம் (1650)

வேண்டுகோள்

08AB4046 இலக்கமுடைய ஏசியா சைக்கிள் கந்தர்மடம் சந்தியில் இருந்து தவறுதலாக மாறி எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். S. V. சந்திரசேகரம், உயிரியல் இரசாயனவியல் திணைக்களம், மருத்துவப்பீடம், பல்கலைக் கழகம், கொக்குவில்: (1559)

பரீட்சைகள்

பிறிமன் லண்டன் பரீட்சைகள் 20-8-89 ல் இந்நிலையத்தில் நடைபெறும். அடுத்த பரீட்சை 89 டிசம்பரில் நடைபெறும். விண்ணப்ப முடிவு 30-9-89 வெளி மாணவர்களும் தோற்றலாம். S. T. C. A: சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்: [1637]

89 சனி, ஞாயிறு வகுப்பு

மாணவர்களுக்கான வகுப்பு திங்கள் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

ஆசிரியர்:-

திரு. ரவிமோகன்

யாழ்ப்பாணம்.

[1554]

வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கொலன் நாட்டு விதை உருளைக்கிழங்கு

இனம்: டிசிறி அளவு: 28/50

எமது சங்கம் மேற்படி விதை உருளைக்கிழங்கைப் பெற்று விநியோகிக்க உள்ளது.

இதற்காக 15. 8. 89 வரை விவசாயிகளிடம் இருந்து முற்பணம் பெற்றுள்ளோம். மேலும் பலர் எம்முடன் விதை கிழங்கினைப் பெற முற்பணம செலுத்ததொடர்பு கொண்டதினால் 31. 8. 89 வரை முற்பணம் பெற மீண்டும் ஒழுங்கு செய்துள்ளோம்

எனவே தவறவிட்டோர் கந்தோர் வேலை நாட்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை அந்தருக்கு ரூ 200/- முற்பணம் செலுத்தி தமது தேவையைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பதிவு செய்யும் கடைசித் திகதி 31. 8. 89 ஆகும்.

பொது முகாமையாளர்.

வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். (நீர்வேலி)

நீர்வேலி,
1989 - 8 - 19. (சி/3233)

ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
22 - 02 - 1911

●●●●

மறைவு:
20 - 08 - 1987

திதி:
27 - 08 - 1989

திரு, சிவசுப்பிரமணியம்
(இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்)

ஈராண்டு மிந்ததென எண்ணுகற்கோ
எம்மிதயம் ஏங்காததையா
பேராரும் எம் கண்ணால் ஒழுகு கண்ணீர்ப்
பெருக்கின்னும் காயவில்லை
தாராள குணசீலா சான்றோர்கள்
மதிக்குமொரு தர்மவானே
சீராளா நின்முகத்து எழிலுருவ
சிலையாகக் காணுதையா!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை. (1557)

1988 கலைமாணிப் பரீட்சையில் சித்தி அடைந்தோர்கள் விவரம்

இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடத்திய (1988) கலை மாணிப்பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன; விவரம் வருமாறு:

முதலாம் வகுப்பில் எவருமே சித்தியடையவில்லை.

இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்தோர் பின்வருமாறு:

மேற்பிரிவு: கே. குலநாயகி கே. மகேசன் வி. நடராஜா எஸ்; நந்தினி எஸ். இராஜராஜேஸ்வரி டபிள்யு. இரகுராகவன் எம் சூசைதாஸன்.

கீழ்ப்பிரிவில் சித்தியடைந்தோர் வருமாறு:

கே. அருந்ததிதேவி எப்: மேரிரூசறி எஸ். மரிகிறேஸ் மங்களம் என். மீனலோஜினி எஸ். சாரதாதேவி கே. சரோஜாமலர் பி. ஜகந்தி எஸ். சுமதி கே. வள்ளிநாயகி கே. விக்னேஸ்வரன் ஏ. அரியதுரை ஜே. மரியமலர் ஏ. மணிகலாவதி எஸ். திருச்செல்வநாதன்.

சாதாரணசித்தி:

என்; அன்பரசி ஜே. அன்; மேரிஜெயந்தினி ஜி. அந்தோனி தவச்செல்வம் கே. அருந்தவராஜா, ஏ. பிறிஜட் ஜெயலதா எம். சந்திரகுமாரி எஸ். சந்திரமலர் பி. கயசிந்த்நீலா கே. இந்திராணி எஸ். இஸ்ஸபெல்கிறிஸ்ஸாந்தினி, ஏ. ஜமுனராணி எச். எம். ஜனோஸ் எல். ஜெயந்தி எஸ். ஜெயலலிதா எஸ் ஜீவமலர் வி. ஜெயரஞ்சினி எஸ். ஜெயகௌரி கி யுடித்தன் ஜனனி எஸ். கலைவாணி வி. கருணாநிதி ரி. கோமளா கே. கோகிலாம்பாள் எஸ். மகாலக்ஷ்மி கே. மனோஹரி ஈ. மேரிஅன்ஜேலா ஏ. மறிஸ்ற்றெலா ஜி. ஏ. மறிஸ்றெலா ஏ. மரியாகோரேஜ் மிருண்டா ஜே. மரியரஞ்சினிதேவி என். மீராஜீ. நளாயினி ரி. நோபேர்ட் விமலதாசன் எஸ்; பாலாராஜா பி. பரமேஸ்வரி என்; பேரின்பகௌரி பி. பென்னரசி ரி. பிரபாகரன் பி; பிரேமளா ஆர். புஸ்பாவதி வி. புஸ்பராணி என். புஸ்பராஜேஸ்வரி வி; றமணி எஸ்; ரதினி ஆர். இராஜேஸ்வரி எ. இரட்ஷிலக்சுமி ஆர்; இராஜேஸ்வரி கே; இராஜேஸ்வரி எம்; இராஜேஸ்வரி ஏ. ரெடெம்பாயூபி எஸ். றிக்கா எஸ்; ரோகினி பி. ரோகினி தேவி கே. சசிகலா பி. சாரதா பி; சத்தியநாதன் கே. சசிகலாதேவி எஸ். செல்வச்சந்திரன் ரி. செம்மனச்செல்வி எஸ். சிவனேஸ்வரி ஏ. கிறானி பெற்ரெஸ்லா கே. சைலஜா வி. சாந்தினி எஸ் சியாமலதா ரி. சிவனேசன் எம்; சிவராஜா பி. சிவஞானம் பி; ஸ்ரீகமலாசனிதேவி ரி; சுபாஜினி ஜி. சுமதி கே; சுமதி கி. சுமதி ஏ. தயாநிதி ரி. தயாநிதி எம்; ரி. தயாநிதி எம். தனலஷ்சுமி ரி. தீவவிஜயரி எஸ். தேவராணி எம். தேவிமாலா ரி. திலகவதி எஸ். திருச்செல்வி என். உமாதேவி கே. வசந்தா எஸ். வசந்தா கௌரி ஏ. வாசுகி எம். வாசுகி வி. விக்னேஸ்வரி கே; விமலாம்பிகை எஸ். ஆர். யோகேஸ்வரி பி. நடராஜா எஸ்; சிவகலா கே. கலாவதி பி. தவமணி எஸ்; ரதியுடெக்ஸ்யாபிறீஸ் எஸ். மகேஸ்வரன் எஸ். மதிவதனா;

ஆர். மேரிஎலிசபெத் எஸ்; எம். ஈ. இருதயமலர் ஜே. தேவதயாளி கே; கமலாவதி எஸ்; குலத்தழகி எஸ். ரஜனி பி. சுமதி ஏ. விமலதேவி எஸ். எம்; இமெல்டா என்; பரமசுந்தரி ரி. கலாதேவி கே. நவரட்ணம் கே. ராஜதுரை பி. கமலாம்பாள் வி. ரஜினிதேவி எஸ். ராதாம்பிகை என்; சிவசக்தி கே. சொர்ணலக்ஷ்மி கே. பாலசௌந்தரி ரி. அன்னலக்ஷ்மி எஸ். வெற்றிவேலுப்பிள்ளை கே. ராஜேஸ்வரி எஸ். ஷியந்தன் எஸ். சிவாநந்தராஜா ஆகியோர். (க-6)

அமலமரி தியாகிகள் தலைவர்வருகை

யாழ்ப்பாணம். அக். 20

அமலமரித் தியாகிகள் சபையின் உயர்தலைவர் பேரருட் திரு. மார்சல்லோ சாகோ இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

1986ஆம் ஆண்டு அமலமரித் தியாகிகள் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டபின்பு ரோமாபுரியிலிருந்து இவர் இங்கு வருவது இதுவே முதல் தடவையாகும்.

யாழ் விஜயத்தின் போது யாழ் மாவட்டத்திலுள்ள குருக்கள், துறவிகள் ஆகியோரையும், பொதுமக்கள் ஆகியோரையும் இவர் சந்திப்பார்.

இவரைக் கௌரவிப்பதற்காக எதிர்வரும் 23ஆம் திகதி மாலை 4-30 மணிக்கு யாழ் பேராலயத்தில் கூட்டுத் திருப்பலியும் பொதுவரவேற்பும் இடம்பெறும். (இ)

முதலுதவி வகுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 20

வண்ணை ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையத்தில் சர்வதேச சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவினால் முதலுதவி வகுப்பு இன்று 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடாத்தப்படவுள்ளது. (ச)

மின்வெட்டால் அரிசி விலை உயர்வு

வவுனியா மாவட்டத்தில் அரிசியின் விலை திடீரென உயரத் தொடங்கியுள்ளது; சென்ற வருடம் மழையின்மையால் வயல் விளையாமை இவ்வருடம் மின்வெட்டால் நெல் குற்றமுடியாமை ஆகியன சேர்ந்து அரிசியின் விலையை நன்கு உயரத்தியுள்ளன. ஒரு கிலோ அரிசி 15 ரூபாவுக்குக் கூட விற்கப்படுகிறது. (க-37)

100ஆம் நாள் நினைவு இன்று

முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன்
(யாழ் மத்தியகல்லூரி உயர்தர வகுப்பு இறுதியாண்டு மாணவனும் வர்த்தக மாணவர் மன்றத் தலைவனும்)

மண்ணில்: 09 — 05 — 1970 விண்ணில்: 13 — 05 — 1989

உன் சிரிப்புடனே சென்று விட்டதே
இல்லை கலகலப்பும் மகிழ்வும் — இனி
என்று திரும்பும் அந்த நாட்கள்?

உன் ஆத்ம சாந்திக்காய் எம் இதய விளக்கேற்றி கண்ணீர் மலர் தூவி நிற்கும்;

உன்-அன்பு
அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி,
அக்காமார், அத்தான்மார், தங்கை, தம்பிமார்,
மருமகன் சனா, பிரியா, சைதா
மற்றும் நண்பர்கள், உறவினர்கள்;

"துர்க்கா ஹோம்"
8/2, தோம்பை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்; [சி-3523]

★ பிள்ளையார் ★

கொழும்பு/யாழ்ப்பாணம்/கொழும்பு

பிரயாணிகளுக்கு ஓர் நற் செய்தி!

முற்றிலும் அதி நவீன
குளிரூட்டப்பட்ட வர்ணத் தொலைக்காட்சி பொருத்தப்பட்ட பஸ்கள்

பகல் சேவையில்

புறப்படும் நேரம்:— யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 7.00 மணி
கொழும்பில் இருந்து:— வெள்ளவத்தை காலை 5.00 மணி
கோட்டை புகையிரத நிலைய முன்பாக காலை 6.00 மணி

ஆசனப்பதிவுகளுக்கு நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது:-

★ கொழும்பு:—
பிள்ளையார்
No. 5, லில்லி அவென்யூ,
வெள்ளவத்தை.

★ யாழ்ப்பாணம்:—
பிள்ளையார் ஸ்ரோர்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
R. B. புக்கிங் சென்ரர்
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

[சி-3524]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்

பிறர்நாணத் தக்கது தான்நாணு ஞயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

பொருள்

ஒருவன் மற்றவர் நாணத்தக்க பழிக்குக் காரணமாக இருந்தும் தான் நாணுமலிருப்பாரானால், அறம் நாணி அவனைக்கைவிடும் தன்மையுடையதாகும்.

உதயன்

இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24807
யாழ்ப்பாணம். 22073
20 08 1989 தபால் இல 31

தமிழும் சைவமுமான பண்டிதமணி

தமிழ்க்கடல் பண்டிதமணியின் நினைவு தினம் இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்படுகிறது. அவர் எழுதிய கட்டுரைகள், ஆற்றிய உரைகள் அடங்கிய தொகுப்பு நூலான செந்தமிழ்க் களஞ்சியமும், பண்டிதமணி நினைவு மலரும் இன்று வெளியிடப்படுகின்றன.

ஈழத்தின் சைவத்தமிழ்க் காவலர் வரிசையில், ஆண்மைக்கால வரலாற்றில் மிக முக்கிய இடம் வகித்தவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்கள். இன்று தமிழும் சைவமும் பரப்பி வரும்பல தமிழ் ஆசான்களை உருவாக்கிய குருமணி அவர் ஆவார்.

பண்டிதமணியின் உருவப் பெ லிவே அவர் தமிழும், சைவமுமாக இருந்தார் என்பதை எடுத்தியம்பிறது அதற்கொப்ப எழுத்தாலும், பேச்சாலும் தமிழையும் சைவத்தையும் அவர் வளர்த்தார்.

இரண்டில் ஒன்றில் அதிகமாக, மற்றதில் குறைவும் என்று சொல்ல இடம் வைக்காமல், தமிழிலும், சைவத்திலும் சம அளவில் பேரறிவு பெற்றிருந்தார் அந்த இரண்டையே தமது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தார்; ஊனும் உயிருமாகக் கொண்டியங்கினர்.

ஈழத்தின் தமிழ் இலக்கிய வழியைக் காட்டிய பண்டிதமணியே ஓர் இலக்கிய வழி ஆவார். அவரது வாழ்க்கை வழியே இலக்கியமாகத் தான் அமைந்தது எனலாம். தமிழின் சிறப்பையும் அதன் சுவையையும் மற்றவர்களுக்கு ஊட்டி அதன்பால் அவர்களின் ஆர்வத்தையும் ரசனையையும் வளர்த்துக் கவர்ந்து இழுத்தவர் பண்டிதமணி. அந்த வகையில் அவர் ஒரு தமிழ்க் காந்தம்.

சைவத்தின் தத்துவங்களையும், தனித்தன்மைகளையும், சன்மார்க்க நெறிகளையும், மரபுகளையும் பேணவும், வளர்க்கவும் அவற்றின் சிறப்புகளையும், ஆழத்தையும் மாட்சியையும் சாதாரணனும் புரிந்து கொள்ளவும் பிரசங்கங்கள் மூலம் பணி இயற்றியவர் பண்டிதமணி ஐயா.

எழுத்தும், பேச்சும் ஒன்றை மற்றது தோற்காது என்ற அளவுக்கு இரண்டிலும் பெரும பாண்டித்தியம் பெறுப் பெரும் பேரறிஞராகத் திகழ்ந்தவர். சுவையான பொருள் புரிந்த, நயம் செறிந்த பேச்சாலும், கருத்தாழம் பொதிந்த எழுத்தாலும் தேன் தமிழுக்கும், சைவத்துக்கும் தொண்டியற்றிய தவமுனி எங்கள் பண்டிதமணி, ஈழத் தமிழர்களுக்குக் கிடைத்த அருந் தவப்பேறு அவர்.

சைவத்திலும், தமிழிலும் தாம் கொண்ட பற்றின் பாற்பட்டு, அவற்றில் ஊறித் திளைத்து நுண்மாண் அறிவும், ஆழ்ந்துணர்ந்த மதிநுட்பமும் பெற்றதால் அவர் அவை இரண்டையும் எழுத்தாலும், பேச்சாலும் வளர்த்த பெறறியரானார்.

ஓட்டு மொத்ததில அவர் தமிழ், சைவ மரபுகளின், அவற்றின் வளர்ச்சியின் ஒரு முக்கிய சந்தி. ஆறுமுகநாவலர் தொட்டு சுன்னாகம் குமாரசாமிப் புலவர் வரை வந்த அறிஞர் சந்ததியின் ஒரு வழித் தோன்றல். ஈழத்துத் தமிழ்—சைவ உலகின் ஒரு சகாப்த புருஷர். தமிழ் — சைவப் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் துலக்கி, மினுக்கி, மெருகூட்டிய பெருமகன், ஈழத் தமிழரின் இலக்கிய, சமய வரலாற்று நாயகன்.

அவர் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய பணிகள் வரலாற்றுப் பேழைகள், அவை ஈழத் தமிழர் வாழும் வரை நினைத்து வாழும்: நினைவில் கொள்ளப் படும்.

அவரது பணிகள், வரலாற்றியலாக்கப்பட்டு, பண்பாட்டியலாக்கப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். அவர் பெயரால் தமிழ்ப் பகுதிப் பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப் புலமைப் பரிசில்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். அப்போது தான் அவரின் பணிகளை ஈழத் தமிழச் சமூகத்திற்கு — வளரும் சந்ததியினருக்கு — அறிமுகம் செய்து உதவலாம். அவர் கனவு கண்ட தமிழ்ப் பண்பாட்டையும், சைவ மரபினையும் வளர்த்துப் பரப்ப உறுதுணை புரிய முடியும்.

[illegible]

பாடப் பணித்தான்

எடுப்பு

ஆவல்கொண்ட ஓளவைக் கருளத் தமிழ்கனிந்த
நாவன்தந்த முருகன் நம்முருகன்
(ஆவல்)

தொடுப்பு

ஏவல்கொண்டு சூரன் இறுமாப் பழிந்து – வென்று
சேவல்கொண்ட கொடியோன் திருமுருகன்
(ஆவல்)

முடிப்பு

காவல்தந்து வேலைக் காட்டிக் கருணைதந்து
கோயில் கொண்டான் நல்லூர்க் கோட்டமதில்
நாவில்வரு ஆப்பன் நாளும் தமிழ்மழுகு
பாவில்வந்து பாடப் பணித்தானே!
(ஆவல்)

(இன்று நல்லூர் கந்தன் 15 ஆம் திருவிழா)

நயினைக் கவிஞர்
— நா. க. சண்முகநாதபிள்ளை

தெல்லிப்பழையில் பால் பதனிடும் நிலையம் நிறுவ நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 20

வலிகாமம் வடக்குப் பிரதேச ஐக்கியநாணய சங்கங்களின் சமாஜம் இங்கு உற்பத்தியாகும் பாலைப்பதனிட்டு ஏனைய பகுதிகளில் விற்பனை செய்யும் திட்டம் ஒன்றை விரைவில் அமுல்நடத்த உள்ளது. பாலைப் பதனிடும் தொழிற்சாலை தெல்லிப்பழையில் அமையும். இதற்கான இயந்திரத்தை சைவவித்தியா விருத்திச் சங்கம் இரவலாகக் கொடுக்க முன்வந்துள்ளது. தெல்லிப்பழை பால் பதனிடும் தொழிற்சாலைக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதி உதவியும் கிடைக்கும்.

வலிகாமம் வடக்குப் பிரதேச ஐக்கியநாணய சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு. சுவாமிநாதன் ஸ்ரீபாலசுந்தரன் மேற்கண்டதகவலை வெளியிட்டார்.

ஆஸ்திரேலியாவில் உள்ள 'மனித உரிமைகள் குழந்தைகள் முதல்' என்ற நிறுவனம் ஏற்றுமதிச் செலவைப் பொறுத்தால் 500 பசுக்களை நன்கொடையாக வழங்க மற்றும் ஒரு ஆஸ்திரேலிய நிறுவனம் முன்வந்துள்ளது என்றும் ஆனால் பால் உற்பத்தியாளர்கள் இங்கு எதிர்நோக்கும் பிரச்சினைகளால் இப்பசுக்களைப் பெறுவதைப் பின்போட வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னர் பால சேகரிக்கும் நிலையங்கள் பாலை காலை, மாலை சேகரித்து திருநெல்வேலியில் உள்ள நல்லூர் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுத்து வந்தன. அங்கிருந்து பால் விளிம்பொச்சிக்கு அனுப்பப்பட்டு வந்தது.

போக்கு வரத்துச் சீர்கேட்டாலும் நாட்டின் நிலைமையாலும் விளிநொச்சிக்கு பால் கொண்டு செல்லப்படுவது நிறுத்தப்பட்டது. எனினும் திருநெல்வேலியில் பால் சேகரிப்பும் விநியோகமும் நடைபெற்று வந்தது.

மின்தடையால் இவ்வேலை பாதிப்படைந்ததால் லலிவடக்கில் பால் சேகரிப்பு நிலையங்கள் பெரும்பாலும் மூடப்படும் நிலையிலுள்ளன.

(இ)

விடுவிப்பு

சில தினங்களின் முன் கோவில் குளம் பகுதியில் வைத்து இலங்கைஇராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் மேலும் மூவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்

(ஒ–144)

மொரிஷியஸ் மாநாட்டுக்கு ஈழத்துக் கல்விமான்கள் இலக்கியவாதிகள் செல்வர்

யாழ்ப்பாணம் ஆக .20

மொரிஷியஸ் தீவில் எதிர் வரும் டிசம்பர் 4ஆம் திகதி முதல் 8ஆம் திகதிவரை நடைபெறவிருக்கும் உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் ஈழத்து உயர்ந்த கல்விமான்கள், இலக்கியவாதிகள், அறிஞர்கள் கலந்துகொள்ள இந்து விவகார துணை அமைச்சு ஏற்பாடுசெய்து வருகிறது.

இத்தகவலைத் துணை அமைச்சர் திரு. பி. தேவராஜ் தெரிவித்தார்.

மிகக் குறைந்த செலவில் பிரதிநிதிகளை அழைத்துச் செல்லவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இலவச விடுதி, உணவு, சுற்றுலா குறித்து மொரிஷியஸ் மாநாட்டுக் குழுவுடன் தொடர்புகொள்ளப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். [இ–21]

இலக்கியக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 20

கும்பசிடி சன்மார்க்க சபையினர் நடத்தும் மாநாந்த இலக்கியக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறும்.

(க)

சமயபாடப் பரீட்சை முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 20

கொழும்பு விவேகானந்த சபையால் 12 - 11 - 1989 இல நடத்தப்பட இருக்கும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு தேதி 15-09 89 வரை நீடிக்கப்பட்டு இருப்பதாக சபையின் பரீட்சைச் செயலாளர் திரு. முருகேசு கந்தசாமி அறிவிக்கிறார்.

எரிக்கப்பட்ட யாழ். நூலகம் தொடர்பாக கோவையை கண்டுபிடிக்க தேடுதல் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஆக 20

எரிக்கப்பட்ட யாழ் பொது நூலகத்தைப் புனரமைக்க ஜனாதிபதி நிதியில் இருந்து 10 லட்சம் ரூபா வழங்குவது சம்பந்தமான கோவையைக்கண்டு பிடிக்கும் வேலைகள் நடைபெறுகின்றன.

முந்திய மாநகரசபை ஆணையாளர் காலத்தில் யாழ் பொதுநூலகத்தைபுனரமைக்க ஜனாதிபதி நிதியில் இருந்து 10லட்சம் ரூபா வழங்க உறுதியளிக்கப்பட்டிருந்தது.

பின்பு அப்பணம் வழங்கப்படவில்லை. அதன்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த கோவை இன்னும் புதிய ஆணையாளருக்குக் கிடைக்கவில்லை.

இக்கோவையைப் பெறவும், ஜனாதிபதி நிதிப் பணத்தைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

(இ–3–10)

சமயபாடப் பரீட்சை முடிவு திகதி நீடிப்பு

மூன்று மதகுருமார் உட்பட 9 பேர் விசாரணையில்

வவுனியா ஆக. 20

வவுனியா மடுக்கந்தை என்னுமிடத்தில் பௌத்த ஆலயம் ஒன்றைச் சுற்றி வசித்த இலங்கை இராணுவத்தினர் 3 மதகுருக்கள் உட்பட 9 பேரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர்.

சம்பவத்தில் இரண்டு துவக்குகள், குண்டுகள் வெடிக்க வைக்கும்சாதனங்கள் ஜே.வி.பி. சுவரொட்டிகள் என்பன கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் வவுனியா பகுதியில் உள்ள எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களான அலகல்ல, தீர்வகம பகுதிகளில் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று கிராம வாசிகளிடமிருந்து 41 துப்பாக்கிகளையும் 220 கும் மேற்பட்ட குண்டுகளையும் அபகரித்துச் சென்றுள்ளது.

(இ – 164)

காரைநகர் சுற்றிவளைப்பு

காரைநகர், ஆக. 20

காரைநகர் வெள்ளிக்கிழமை அதிகாலை சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இத் தேடுதலின் போது அனைத்துக் கிராமங்களில் இருந்தும் இளைஞர்கள் முகாமுக்கு அழைத்து வரப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

அதிகாலை ஆறுமணி முதல் நண்பகல் ஒருமணி வரை தேடுதல் நடைபெற்றது.

குறிப்பிட்ட இடைவெளிக்குள் வலந்தலைச் சந்தி முகாமத்தாண்டிச் செல்வதற்கு பாதசாரிகளை, வாகனங்களை அனுமதிக்கப்படவில்லை.

இத் தேடுதலின் போது நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பகுதிபகுதியாக வேறு வேறான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

கிவன்கோயில் வீதி, சேவகர் கோயிலடி, இலந்தைச்சாலை, மல்லிகை, கிவகாமி அம்மன் கோவிலடி, வேதரடைப்பு, கோவளம் ஆகிய கிராமங்களில கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் கோவளம் கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். தங்கோடை, வாரிவளவு, கின்னலடி, ஆலடி, பொன்னம் பலம் வீதி, புதுரோட், சுப்பிரமணியம் வீதி ஆகிய கிராமங்களில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் வலந்தலைச்சந்தி முகாமுக்கு அழைத்து வரப்பட்டு விசாரணையின் பின்னர் பிற்பகல் 5. 30 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்

விசாரணைக்காக இளைஞர்கள் முகாமுக்கு அழைத்துச் செல்லப்படும்போது பின்னால பெற்றோர்களும் படை எடுத்துச் சென்றனர்.

●'நான் ஜே.வி.பி. அல்லன்'

நான் ஜே. வி. பி. அல்லன். ராஜ்யசபாவில் இலங்கைப் பிரச்சினைபற்றிக் காரசாரமாகப் பேசிய த. மு. எ. எம் பி வை கோபாலசாமியைப் பார்த்து இந்திய இணை அமைச்சர் எம் எம் ஜேக்கப் இப்படிக் கூறினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா நடந்து கொள்ளும் விதம் குறித்து திரு. கோபாலசாமி காரசாரமாகப் பேசினார்.

'என்னை ஜே வி பி என்று நினைக்கவேண்டாம்' என்று இணை அமைச்சர் ஜேக்கப் கூறவே சபையில் சிரிப்பொலி எழும்பியது.

(இ–எ)

சந்தை நாட்கள்

யாழ்ப்பாணம், ஆக. 20

சாவகச்சேரிச் சந்தை கூடும் நாள் சனிக்கிழமையாதலால் அன்றையதினம் நண்பகலுடன் கடைகள் பூட்டப்படுவதால் சந்தைக்கு விற்பனவுக்காகவும், கொள்வனவுக்காகவும் கிராமப்புறங்களிலிருந்து வரும் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இம் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு சந்தை நாளான சனிக்கிழமை முழு நாளும் கடைகள் திறப்பதற்கும், முதல் நாளான வெள்ளிக்கிழமை பிற்பகலும், ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் கடைகளை மூடுவதற்குமான ஆலுமதியைவடக்கு-கிழக்கு மாநில வர்த்தக ஊழியர் சங்கம் வழங்கியிருக்கிறது.

வணா. அருளானந்தம் நினைவாக சென். ஜோன்ஸ் கல்லூரியில் விஞ்ஞான மண்டபம்

யாழ்ப்பாணம், ஆக. 20

சென், ஜோன்ஸ் கல்லூரியின் முதலாவது தேசிய அதிபரும் கல்லூரியில் 17 வருடங்கள் அருமபணியாற்றியவருமான வண. ஜே. ரி. அருளானந்தம் ஞாபகார்த்தமாக கல்லூரியில் புதிய விஞ்ஞான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த மண்டபத்தில் பௌதிகம், இரசாயனம், தாவரவியல் ஆகிய துறைகளுக்குரிய விஞ்ஞான ஆய்வு கூடங்கள் அமையவிருக்கின்றன.

1987ஆம் ஆண்டு அக்டோபரில் இடம்பெற்ற வன்செயல்களில் சேதமுற்ற கட்டடத்தைத் திருத்தி அமைப்பதற்குப் பதிலாக புதிய கட்டடம் ஒன்றை அமைக்கும்படி கட்டட நிபுணர்கள் ஆலோசனை தெரிவித்திருந்தனர் என்றும் –

அதற்கு அமையவே வண. அருளானந்தம் ஞாபகார்த்த மண்டபம் அமைக்கப்படுதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

நாவாந்துறை கிளை நூலகம்

யாழ்ப்பாணம், ஆக. 20

இதுவரை காலமும் மூடப்பட்டு இருந்த யாழ்-மாநகர சபையின் நாவாந்துறைப் பகுதிக் கிளை நூலகம் சென்ற 11-ஆம் திகதி மீண்டும் பொது மக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அசம்பாவிதத்தின்போது இக்கிளை நூலகம் மூடப்பட்டது. (க-13)

கட்டடம்

பண்டத்தரிப்பு, ஆக. 20

பண்டத்தரிப்பு கோட்டக் கல்விக்கான அலுவலகக் கட்டடம், பண்டத்தரிப்பு உயர் தர மகளிர் கல்லூரி வளவில் அமைய உள்ளது. (இ-120)

உப-அதிபர்

பண்டத்தரிப்பு. ஆக. 20

அருள் சுப்பிரமணியம் இளவாலைக் கொத்தணியின் உப-அதிபராக தெரிந்து எடுக்கப்பட்டுள்ளார். (இ-120)

கண்டதும் கேட்டதும்

வடபகுதிக்கு மின்சாரம் நின்றதுதான் தாமதம் ஹரிக்கேன் லாந்தர், மேசை விளக்கு, கை விளக்கு ஆகியவற்றுக்கு ஓர்ர கிராக்கி! பாவனையில் இருந்து ஒதுங்கி இருந்த பெற்ரோமாக்ஸ் விளக்குகளும் தலை காட்ட ஆரம்பித்துவிட்டன.

கடைகளின் மேல்தட்டுகளிலும் மூலைகளிலும் தூசி படிந்து கிடந்த இவ்விளக்குகள் திடீரென்று பெரும் அளவில் விலையாக வருகின்றன.

மின வெளிச்சத்துக்குப் பழகியவர்களுக்கு மற்ற வெளிச்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால என்ன செய்வது?

மின் துண்டிப்பு மின்சார சபையினரைக் கூட விட்டு வைக்கவில்லை!

இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் 'அலுவலகம் பகலில் 'பெற்ரோமாக்ஸ்' வெளிச்சத்திலேயே இயங்குகின்றது. மின் அத்தியட்சகர் பிரிவில் இரவில் கடமையாற்றும் ஊழியர்கள் குப்பிவிளக்கிலேயே கடமை புரிகின்றார்கள்.

அரசன் ஒருநாள் ஆண்டியானான் என்று தமிழறிஞர் சொன்னது எவ்வளவு அர்த்தமுள்ளது பார்த்தீர்களா?

— செய்திலோன்

வாசகர் திருமுகம்

துர்நாற்றத் தோட்டம்

எழுதிதி லெங்கும் சுத்தம்
எப்பவும் குப்பை கூளம்
எடுத்துச் சொல்ல யாரும்
இல்லையோ இறைவா!
நாதியற்ற பிணம் போக்
நாறிக் கிடக்குதே
காக்கை தீவு
காறித் துப்ப ஏவுதே
மூக்கைப் பொத்தவருகுதே!
மூக்கை மூடிப் போவதோ!
மூச்சு முட்டிச் சாவதோ!
மாற்றம் ஒன்றும் இன்றி
வளருது துர்நாற்றத்
தோட்டம்
மாறுமோ இந்த நாசம்
தீருமோ இந்த வேதனை
— தேவன்
அராலி

நிவாரணப் பட்டியல்

கோப்பாய் வடக்கில் உற்பத்தித் திறன் வாய்த்த தொழில் முயற்சிக்கான நன்கொடையில் முறைகேடுகள் நடந்திருக்கலாம் எனச் சந்தேகிக்க இடம் ஏற்பட்டுள்ளது.

உண்மையில் நிவாரணம் பெறத் தகுதி பெற்ற பலர் புறக்கணிக்கப்பட்டு இருக்கும் அதே வேளையில், நிவாரணம் பெறத் தகுதி அற்றவர்களை பலர் இந்த நிவாரணம் பெற்றுள்ளார்கள்.

இக் குறைபாட்டினை மறைக்கு முகமாகத் தான் நிவாரணம் பெற்றவர்களின் பெயர்களை வெளியிடுவதற்கு முன்னதாக கோப்பாய் வடக்கில் இத் திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறத் தெரிவு செய்யப்பட்ட அனைவரது பெயர்களையும் பகிரங்கப் படுத்தும்படி இதில் சம்பந்தப்பட்ட சகலரையும்பொதுமக்கள்சார்பில்கேட்டுக் கொள்கிறேன்

பொ. செந்தூரன்,
கோப்பாய்

சமய அரங்கத்திலிருந்து

மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக. 20

மண்ணூர் உப்புக்குளம் ஸ்ரீ வாணிக்கூடம் சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

(க)

"சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள்"

யாழ்ப்பாணம், ஆக. 20

யாழ் பல்கலைக்கழகச் சமஸ்கிருதத்துறைத்தலைவர் பேராசிரியர் வி. சிவசாமி எழுதிய 'சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள்' நூல் வெளியீடு நாளை திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ்பாணப் பல்கலைக்கழத்திலுள்ள கலைச் சபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்நூல் பிரபல சமஸ்கிருத விற்பன்னரும், இந்துநாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களின் அறுபதாம் ஆண்டு நிறைவையொட்டி வெளிவருகின்றது.

நூலில் சமஸ்கிருத இலக்கியம் பற்றிய 12 கட்டுரைகள் சுமார் 200 பக்கங்களில் இடம் பெற்றுள்ளன.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் வைபவம் நடைபெறுகிறது.

முடிவில் பரதநாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெற உள்ளது.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியவளையில்

ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க காணி ஒதுக்கீடு

தாளையடி, ஆக. 20

வடமராட்சி கிழக்கிலுள்ள ஆழியவளையில் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் அமைக்க காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலிதகுமார் இந்நிலையம் அமைக்க ஆழியவளைப் பகுதியில் காணி தேவை என "உதயன்" மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இச்செய்தியை அடுத்து ஆளியவளை கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகத்தினர் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலிதகுமாருக்கு ஆழியவளையில் உள்ள அரச காணி ஒன்றையும் காண்பித்தனர்.

அவர் திருப்தி அடைந்ததை அடுத்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. சந்திரசேகரம் அக் காணியை இதற்காக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதிகளுக்கான ஐக்கிய நாடுகள் டயர் ஸ்தாபனத்தால் 3 லட்சம் ரூபா செலவில் இந்நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்நிலையத்தினால் இப்பகுதி மக்கள் பெரும் பயனடையவுள்ளார்கள். (இ-144)

வெளிநாட்டுப் பயணம்

★ அவுஸ்திரேலியா, ஜெர்மனி ★

அடுத்த ஜெர்மனி பயணம்
26. 08. 1989
விரும்புவோர் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நேரில் சந்திக்கவும்:

★ சவூதி அரேபியா:
கிளினேர்ஸ், ஹவுஸ் டிறைவர், காப்பென்டேர்ஸ்.

★ ஓமான்:
ரெயிலேஸ்

★ குவைத்:
பணிப் பெண்கள், தாதிகள் (Nurses)

தொடர்பு:
திரு. க. இந்திரலிங்கம் (சந்திரன்)
நிரோஷன் என்டபிறைஸ்
பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.
காங்கேசந்துறை.
(T. B. வைத்தியசாலைக்கு அருகில்)
(1634)

90 வது நாள் நினைவஞ்சலி

திரு. வேலாயுதன் பார்த்தீபன்
(பாபு)

அன்னைமடியில்: 1963 - 03 - 11
ஆண்டவன் அடியில் 1989 - 05 - 23:

அன்பின் திருவுருவாய்,
குழந்தை உள்ளம் கொண்டவனாய்
வாழ்வெல்லாம் கலகலப்பாய்
எவ்வோரையும் மகிழ்வித்த - ஒளிவிளக்கே
தன்னலம் பாராது,
பிறர் நலம் கருதியே
கள்ளமில்லா உள்ளத்துடன்
உதவிகள் பல செய்த - உத்தமனே
எங்கு சென்றாய்?

உன் நினைவால் காலமெல்லாம் கண்ணீருடன் தவிக்கின்றோம். உன் ஆத்துமா சாந்தியடைய நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், தந்தை,
சகோதரன், சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

சந்திரிக்கா, அரிசி ஆலை,
மன்னார் வீதி
வவுனியா.
(1623)

90 ஆவது நாள் நினைவஞ்சலி

திரு. வேலாயுதம் பார்த்தீபன்
(பாபு)

தோற்றம்: 11-3-1963
மறைவு: 23-5-1989

எங்கள் அன்பு பாபு அண்ணா!

மாதங்கள் மூன்றாயினும் ஆறவில்லை எம் மனது. இன்பத்திலும் துன்பத்திலும் எமக்கு உறுதுணையாக இருந்தீர்கள். இன்னல்கள் பல வரினும் அவற்றை இன்முகத்துடன் ஏற்றீர்கள். இனி எப்போது நாம் காண்போம். உங்கள் திருமுகத்தை.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

மதுச்சாலை, சந்திரிக்கா அரிசி ஆலை
ஊழியர்கள்.
வவுனியா.
(1622)

அதிக விளைச்சல் தரும் 3 திராட்சை இனங்கள்

ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிப்பு

அதிக விளைச்சல் தரக்கூடிய மூன்று திராட்சை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

மகா இலுப்பக்கம் விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின்போது இது கண்டுபிடிக்கப்பட்டது.

விவசாய அமைச்சரின் பணிப்பின் பேரில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் முதலில் 12 புதிய இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அவற்றில் மூன்று இனங்கள் அதிக விளைச்சலைத் தரக்கூடியவை என்பதும் நோய்த் தாக்கம் குறைந்தவை என்பதும் தெரிய வந்தது.

இம் மூன்று இனங்கள் சம்பந்தப்பட்ட மேலதிக ஆராய்ச்சியில் அவை சகல பாகங்களிலும் செய்கை பண்ணப்படக் கூடியவை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. (ஒ-120)

சிறு வயதில் இருந்தே வீரத்தை புகட்ட வேண்டும்

இல்ல விளையாட்டு போட்டியில் உரை

பச்சிலைப்பள்ளி, ஆக 19

பாடசாலை மாணவர்களுக்கு சிறு வயதிலேயே வீரத்தை புகட்டவேண்டும். இவ் வயதில் போட்டிகளில் கலந்து கொள்ளும் சிறுவர்கள் வருங்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ முடியும்.

சாவகச்சேரி கச்சாய் வீதி வளளுவர் அறவழி பாலர் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வைத்தியக் கலாநிதி த. சிங்கராசா மேற்கண்டவாறு கூறினார்.

இப்பகுதி அறவழி அபிவிருத்தித் தலைவர் க. நாகராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தென் இந்திய திருச்சபை யாழ் ஆதின வண பிதா ராஜ்குமார் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். (இ)

பொதுக் கிணறுகளையும் குழாய்க் கிணறுகளையும் அமைக்க நடவடிக்கை

தாளையடி, ஆக. 20

சர்வோதய இயக்கம் வடமராட்சியிலும், வடமராட்சி கிழக்கிலும் பல குடிதண்ணீர்ப் பொதுக் கிணறுகளையும் குழாய்க்கிணறுகளையும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது:

ஆழியவளை, காரவெட்டி ஆகிய பகுதிகளில் பொதுக் கிணறுகள் அமைக்கப்பட உள்ளன.

பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியவற்றில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட உள்ளன. (இ-144)

வட்டுக்கோட்டையில்

திருடர் தொல்லை அதிகரிப்பு இரவு நேரத்தில் மக்கள் பீதி!

யாழ்ப்பாணம், ஆக. 20

வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதிகளில் தற்பொழுது திருடர் தொல்லை அதிகரித்து வருகிறது. ஒரு சிலரைக்கொண்ட ஒரே கோஷ்டி இந்தத் திருட்டுக்களிலும் திருட்டு முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றதாம்.

ஒரு வீட்டில் திருட வரும் போது அயலவர்கள் விழித்துக் கொண்டால் திருடர்கள் உடனே மாயமாக மறைந்து விடுகின்றனராம்.

திருட்டுக்களை நிறுத்தவும், திருடர்களை கண்டு பிடிக்கவும் யாருமில்லாததால் அப்பகுதி மக்கள் தினமும் இரவு நேரங்களில் விழித்திருந்து தாமே காவல் புரிகிறார்கள்.

திருடர் கோஷ்டி அடிக்கடி வந்து தொல்லை கொடுக்கிறது ஆனால் மக்களை அவர்களிடம் இருந்து பாதுகாக்க எவருமில்லை என்ற நிலையாகிவிட்டது. (ச)

வவுனியாவில் பரீட்சை

வவுனியா, ஆக. 20

வவுனியா மாவட்ட 89ஆம் ஆண்டு மாணவர்களுக்கான ஆரம்ப அமரவு தொலைக்கல்வப் பயிற்சிநெறி இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பயிற்சிநெறி காலை 8-30 மணிக்கு வவுனியா மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என சிரேஷ்ட போதனா சிரியர் அறிவித்துள்ளார் (இ6)

கூட்டம்

மானிப்பாய், ஆக 20

உடுவில் கொத்தணிப் பிரிவுக்குட்பட்டபாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உத்தியோகத்தர்களின் கூட்டம் ஒன்று மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்

உடுவில் கொத்தணி அதிபர் திரு. எஸ். சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் இப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை அபிவிருத்திச்சபை நிர்வாக உறுப்பினர்களில் இருந்து இரண்டு பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (க-90)

கூட்டம்

யாழ்ப்பாணம் ஆக, 20

உலகத் தமிழ் பண்பாட்டு இலக்க இலங்கைக் கிளையின் ஆட்சிக் குழுக கூட்டம் இயக்கத் தலைவர் சட்டதிதரணி திரு பொன் பூபாலசிங்கம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 30 மணிக்கு நடை பெற உள்ளது. அத்தருணம் "உலக தமிழர் குரல்" பத்திரிகையின் வெளியீட்டு வைபவமும் நடைபெறும் என அறியமுடிகிறது. (க)

ஆண்களைப் பணயம் வைத்து மடுவில் நடந்த கொள்ளை!

குருநகர், ஆக 20

மடு யாத்திரிகள் 30 பேர் சென்ற வாகனத்தை ஆயுதக் கோஷ்டி ஒன்று சூழ்ந்து கொள்ளை நடத்தியது.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் மாதா கிராமம் என்ற பகுதியில் நடைபெற்றது.

சம்பவம் பற்றிதி தெரிய வருவதாவது:

குருநகர் பகுதியில் இருந்து மடுத்திருநாளுக்குச் சென்றிருந்த ஆண்கள் பெண்கள் அடங்கிய 30 பேர்கள் குளிப்பதற்காக மடுவில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள மாதா கிராமத்திற்கு வான் ஒன்றில் சென்றிருந்தனர்.

வானை சூழ்ந்த ஆயுதக் கோஷ்டி அதில் சென்றிருந்த 8 ஆண்களைப் பணயம் வைத்து நாற்பது ஆயிரம் ரூபா கேட்டனராம்.

கையில் அந்தளவு பணம் இல்லாததால் பெண்கள் தாம் அணிந்திருந்த நகைகளைக் கொடுக்க முன்வந்த போதும் கோஷ்டியினர் நகைகளை வேண்டாமென்று மறுத்தனராம்.

எல்லாரிடமும் இருந்த பணத்தைச் சேர்த்து வந்த ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை வாங்கிக்கொண்டு கொள்ளையர் பணயமாக வைத்திருந்தவர்களை விட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

கிளிநொச்சி பாடசாலையில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஆக.20

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் கடந்த புன்கிழமை இரவு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

பாடசாலைக் களஞ்சிய அறை உடைக்கப்பட்டு பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ 76)

ஆளுநர் சபை உறுப்பினர்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராகக் கடமையாற்றிய ஜனாப் எஸ். எச். எம். ஜெமீல், உயர்கல்வி, விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சின் கீழுள்ள "நிடெக்" எனப்படும் கம்பியூட்டர் தகவல் தொழில்நுட்பக் கவுன்சிலின் ஆளுநர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ - 14)

★ திருமண அழைப்பிதழ் ★

நிகழும் மங்களகரமான கலியுக ஆண்டு ஆவணி மாதம் 5 ஆம் நாள் [21 - 08 - 1989] திங்கட்கிழமை காலை 9.54 முதல் 11.39 வரையுள்ள
★ துலாம் இலக்கின சுப வேளையில் ★

எமது செல்வன் / சகோதரன்
திருவளர் செல்வன்
ஸ்ரீந்திராவுக்கும்

எமது புதல்வி / சகோதரி
திருநிறை செல்வி
சுபாஷினிக்கும்

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு அரியாலை "ஸ்ரீ சித்திவிநாயகர்" ஆலயத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

தங்கள் நல்வரவை இனிது விரும்பும்

திரு: திருமதி. நாகலிங்கமும் பிள்ளைகளும்
25/18, கோயில் வீதி,
அரியாலை.

திருமதி: க. முத்துச்சாமியும் பிள்ளைகளும்
11/1, செம்மணி ஒழுங்கை,
அரியாலை.

தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை. [1638]

தரமான கலர்ப்படப் பிரதிகள்

அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...

கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

ஷப்ருவை நாடுங்கள்:

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கு மாகாண அரசு பதவி வெற்றிடங்கள்

வடக்கு - கிழக்கு மாகாண எழுதுவினைஞர் சேவையில் [II] ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவிற்கு ஆட்சேர்த்தல் — 1989

வடக்கு - கிழக்கு மாகாண எழுதுவினைஞர் சேவையில் II ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவிற்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. தகுதி:- (அ) இலங்கைப் பிரஜையாயிருத்தல் வேண்டும்:

(ஆ) வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். அல்லது சடைசி விண்ணப்பதேதிக்கு முந்திய 6 வருட காலத்திலேக்குள் 3 வருடங்கள் தொடர்ச்சியான வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வதிந்திருத்தல் வேண்டும். அல்லது தொடர்ச்சியான 5 வருடங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடுத்தரக்கல்வி பெற்றிருக்க வேண்டும்;
விண்ணப்பதாரியின் பெற்றோர்களில் எவராவது இடமாற்றத்திற்கு அடங்கிய அரச சேவையிலோ, உள்ளூராட்சி சேவையிலோ, கூட்டுத்தாபனங்களிலோ, கடமையாற்றுபவராக அல்லது கடமையாற்றியவராக இருப்பின், அப்பெற்றோர் எவராவது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிறந்திருப்பின் குறிப்பிட்ட விண்ணப்பதாரர் தகுதி பெறுபவர் ஆவார்:

(இ) விண்ணப்பதாரர் 17 வயதிற்கு குறையாதவர்களாவும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) நற்குணமுடையவராக இருத்தல் வேண்டும்:

(உ) பின்வரும் தராதரங்களில் ஒன்றையாவது உடையவராயிருத்தல் வேண்டும்:

1). கிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் மொழியில் அல்லது இலக்கியத்திலும் மற்றும் கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் என்னும் இரண்டும் உட்பட ஆகக் குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2). பொதுக்கல்விச் சான்றிதழ் (சாதாரணர)ப் பரீட்சையில் குறிப்பிட்ட 6 சித்திகளும், இரண்டு தடவைக்கு மேற்படாமல் பெறப்பட்டிருப்பதுடன் குறைந்தது 5 சித்திகளாவது ஒரே தடவையில் பெறப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் இதே இரு அமர்வுகளில் குறைந்தது 4 திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

1) அத்திறமைச் சித்திகளில் இரண்டு தமிழ்/சிங்கள மொழி அல்லது தமிழ்/சிங்கள இலக்கியம்.

அத்துடன்

(11) எண்கணிதம்/தூயகணிதம்/ஆரம்ப கணிதம்/வர்த்தக எண்கணிதம்/கணிதம்.

3). தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் முதல் மொழியும் கணிதமும் அடங்கிய 4 பாடங்களில் ஏ அல்லது பி தரத்திற்கு குறையாத சித்தியும். சி தரத்திற்கு குறையாத மற்றைய சித்திகளுமாக 6 பாடங்களில் இருமுறைக்கு மேற்படாத அமர்வுகளில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(ஊ) சிறந்த உடல் நலம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

03. வேதனத்திட்டம்:- ரூபா 17,280 — 14×480 — 6×600 — 27,600

04. விண்ணப்பங்கள்:-

(1) மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த விளம்பரத்தின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய முழுத்தாளின் அரைத்தாளில் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்படுதல் வேண்டும்

(11) விண்ணப்பங்கள் 'செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, திருகோணமலை என்ற முகவரியிடப்பட்டு 15-09-1989ஆம் திகதியோ அதற்கு முன்னரோ செயலாளருக்குச் கிடைக்கக் கூடியதாக பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பமெதுவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'மாகாண எழுதுவினைஞர் சேவை'' என தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(111) விண்ணப்பதாரர் 30 ரூபா பெறுமதியான பரீட்சைக்கட்டணத்தை காசுக் கட்டளை மூலமாக அனுப்புதல் வேண்டும். காசுக்கட்டளையை 'செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, திருகோணமலை' என பெறுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படலாகாது.

(v) விண்ணப்பதாரரின் கையொப்பம் பின்வருவோருள் யாரேனும் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்படுதல் வேண்டும்.

(அ) சமாதான நீதிவான்
(ஆ) சத்திய பிரமாண ஆணையாளர்
(இ) வழக்கறிஞர்
(ஈ) பிரசித்த நொத்தாரிசு
(உ) அரசாங்க அல்லது உதவி பெறும் பாடசாலையின் அதிபர்
(ஊ) கடற்படையை அல்லது வான்படையை அல்லது தரைப்படையைச் சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர்
(எ) பொலீஸ் சேவை கசற் நிரல் உத்தியோகத்தர்
(ஏ) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் வகிப்பவரும் ஆண்டொன்றுக்கு 24,000/- ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறுபவருமான அரசாங்க உத்தியோகத்தர்
(ஐ) வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள சமயகுரு:

05. தேர்வுத்திட்டம்:-

(1) விண்ணப்பதாரர்கள் தகவுத்திறன் திட்ட அடிப்படையில் நியமனத்திற்கு தெரிவு செய்யப்படுவர். இத்திட்டத்தில் பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரணதர)ப் பரீட்சையில் அல்லது தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது கிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் பெறுபேறுகளுக்கு வழங்கப்படும் புள்ளிகள் பின்வரும் அடிப்படையில் அமையும்.

(11) தகவுத்திறன் திட்டம்:-

(அ) பொதுக் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சை (சாதாரணதர) அல்லது கிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் 6 பாடங்களில் விண்ணப்பதாரர் பெற்ற தரங்களுக்கெனப் புள்ளிகள் பின்வருமாறு ஒதுக்கப்படும்:-

விசேட சித்தி — 75 புள்ளிகள்
திறமைச் சித்தி — 50 புள்ளிகள்
சாதாரண சித்தி — 40 புள்ளிகள்

அல்லது தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில்

தரம் ஏ — 75 புள்ளிகள்
தரம் பி — 50 புள்ளிகள்
தரம் சி — 40 புள்ளிகள்

விண்ணப்பதாரர் உயர் பாடசாலை சான்றிதழ் பரீட்சையில் அல்லது பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (உயர்தரம்) 4 பாடங்களில் சித்தி எய்தியிருப்பின் அவர் 30 மேலதிக புள்ளிகளுக்கு உரித்துடையவராவர்; எப்படியாயினும் பொதுக் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சையில் (உயர்தரம்) 4 பாடங்களுக்குக் குறைவாகச் சித்தி எய்தியிருப்பின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது:
100 புள்ளிகள் கொண்ட நேர்முகப் பரீட்சை ஒன்றும் நடைபெறும்: சிறப்புத் திறமையின்படி அதிகப் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவிருக்கும் தொகை வெற்றிடங்களின் தொகையின் இருமடங்குக்குக் குறையாமலிருக்கும்.
தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தகவுத்திறன் திட்டத்திலும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கேற்பத் திறமை ஒழுங்கின் படி தெரிவு செய்யப்படுவர்.

06. ஏற்கனவே எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி இருப்பவர்கள் அனைவரும் இவ்விளம்பரத்தில் உள்ள விண்ணப்பப்படிவத்தில் திரும்பவும் விண்ணப்பிக்க வேண்டும்:

செயலாளர்,
மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

35, மக்கேசர் வீதி,
உவர்மலை, திருகோணமலை.
11 - 08 - 89.

விண்ணப்பப் படிவம்

மாகாண எழுதுவினைஞர் சேவை 1989

1; 1;1 முதலெழுத்துக்களுடன் பெயர்:-
1;2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் அல்லது பெயர்கள்:-
1;3 பால்:-
1;4 விவாகம் செய்தவரா/ செய்யாதவரா:-
1;5 தேசிய இனம்:-

2. 2;1 முகவரி:-
2;2 விளம்பரத்தின் பகுதி 2 (ஆ) இன் பிரகாரம் விண்ணப்பதாரரின் பிறப்பு பெற்றோரின் வதிவிடம் பற்றிய விபரம்:-

3. 3;1 பிறந்த திகதி:-
3;2 1989. 09 15 இல் வயது
வருடம்.....மாதம்.....நாட்கள்

4. கல்வித் தகைமைகள்:-
4;1 பரீட்சையின் பெயர் (சி. பா. சா. அல்லது பொ.க. சா அல்லது தே.பொ.க):
4;2 பாடங்களும் சித்திகளும்:-

தரம்	சித்தியெய்திய வருடங்கள்	பரீட்சை நிலையம்	சுட்டிலக்கம்
.....	.....	.....	.....
1. மொழி அல்லது இலக்கியம்			
2. கணிதம் அல்லது எண்கணிதம்			
3.			
4:			
5.			
6.			

4;3 பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தரம்) பரீட்சை:-

பாடங்கள்	சித்தியெய்திய வருடம்	பரீட்சை நிலையம்	சுட்டிலக்கம்
.....	.....	.....	.....

5. எப்போதாவது எக்குற்றத்திற்காகவேனும் நீர் குற்றத் தீர்ப்புப் பெற்றுள்ளீரா? அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? அல்லது உமக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறாயின் திகதி, தவறின் தன்மை, நீதிமன்றத்தின் பெயர், வழக்கு இலக்கம் என்பனவற்றைக் கூறுக:

6. (1) நான் தந்துள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு சரியானவையும், உண்மையானவையும் என்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்:

7. திருகோணமலை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக ''செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, திருகோணமலை'' என எடுக்கப்பட்ட 30/- ரூபா காசுக் கட்டளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
காசுக்கட்டளையின் இலக்கம்:- .....
காசுக் கட்டளை பெறப்பட்ட
தபாற்கந்தோர் பெயர் :- .....
திகதி :- .....

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம்

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:-
நான் திரு:/ திருவாட்டி/ செல்வி ..... என்பவர் தற்போது ..... இல் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார் என்றும் ..... இல் தற்போது வதிகிறார் என்றும் எனக்கு நன்றாகத் தெரிந்தவர் என்றும் அவர் இவ்விண்ணப்பத்தில் தமது கையொப்பத்தை..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆந் திகதி என் முன்னிலையில் இட்டாரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.....
விண்ணப்பதாரியின் கையொப்பத்தை
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர் :-
முகவரி :-
நிலை :-
திகதி :

(பி-8223)

தோட்டத்துரை சுட்டுக் கொலை

கொழும்பு ஆகஸ்ட் 20 பசறையில் உள்ள வேவல்ஸ் குரூப் தோட்ட உதவி கப்ரிண்டன் சேனக வீரசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
தோட்டப் பங்களாவில் இருந்து அவரைக் கடத்திச் சென்ற இனந்தெரியாத நபர்கள் முதலில் அவரைச் சுட்டனர். பின்னர் அவரின் கழுத்தை கத்தியால் வெட்டினர். (ஒ-எ)

வேலைக்குத் திரும்ப வேண்டுகோள்

கொழும்பு, ஆகஸ்ட் 20 அரசாங்க ஊழியர்கள் சகலரையும் வேலைக்குத் திரும்புமாறு பொதுநிர்வாக, உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் திரு. யு பி. விஜேகோன் வேண்டுகோள் விடுத்தார்:
அரசாங்க சேவையின் முக்கியத்துவத்தை விளக்கி, ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறு அவர் கேட்டுக்கொண்டார்: இது சம்பந்தமாக அவர் நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார். (அ)

போக்குவரத்துக்கு அனுமதி

பச்சிலைப்பள்ளி, ஆக: 20 புத்தூர்ச்சந்தி முகாம் முன்னால் உள்ள கண்டிவீதி போக்குவரத்துக்கு முற்றாகத் திறந்துவிடப்பட்டுள்ளது.
இதுவரை வீதியின் ஒரு பகுதி மட்டுமே பாவனைக்கு விடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது: (ஆ-117)
(இ-9)

உதவி அ. அதிபர் மாநாடு

யாழ்ப்பாணம், ஆக. 20 யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கான மாநாடு ஒன்று யாழ்செயலகத்தில் நடைபெற்றது.
அந்த மாநாட்டில் உதவி அரசாங்க அதிபர்களும் மற்றும் பல்வேறு செயலக உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ-9)

மலசல கூடம் அமைக்க ரூ. 75 ஆயிரம்

பண்டத்தரிப்பு ஆக: 20 பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு மலசல கூடங்கள் அமைக்க 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
இந்நாள் நிலைமையை நேரில் பார்வையிட்ட சண்டிலிப்பாய் உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆறுமுகதாசன் மலசல கூட அமைப்பிற்குமேற்கண்ட பணத்தை ஒதுக்கியுள்ளார். (இ - 120)

சேவாச்சிரம பொன் விழா

யாழ்ப்பாணம் ஆக. 20 மருதனார்மடம் கிறிஸ்தவ சேவாச்சிரமத்தின் பொன் விழா இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் மேற்படி ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.
கிறிஸ்தவ சேவாச்சிரமத்தின் 50 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் விழாவின் இன்றைய நிகழ்ச்சியில் நற்கருணை ஆராதனை, பக்திப்பாடல்கள் ஆகிய நிகழ்ச்சிகளுடன் ''மனம் மாறிய மைந்தன்'' நாட்டுக்கூத்தும் இடம்பெறும்.
நாளை திங்கட்கிழமை நற்கருணை ஆராதனை, திருமுழுக்கு ஆராதனை இசை நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சிகளுடன் முதியோர்களுக்கான ''மகிழ்ச்சியின் இல்லத்துக்கான'' அத்திவாரக்கல் நடுதல் ஆகியவும் இடம்பெறும். (க - 6)

முதலுதவி வகுப்பு

யாழ்ப்பாணம், ஆக, 20 வண்ணை ஸ்ரீகாமாட்சி சன சமூக நிலையத்தில், சர்வதேச சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவினால் முதலுதவி வகுப்பு இன்று 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடத்தப்படவுள்ளது. [க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணியின் வசன நடை

பண்டிதமணியின் வசன நடையைப் பற்றிக் கூறுமிடத்துப் பேராசிரியர் க. வித்தியானந்தன், "இவரது நடை இவருக்கே அமைந்த நடை. அந்த நடைதான் இவரின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றது" என்பார்.

மொழியைக் கையாண்டு அதனைச் செய்ய விழையும் ஆசிரியருக்கு வேண்டியவை இரண்டு. ஒன்று, கூறவந்ததை குறித்த தெளிந்த சிந்தனை. இரண்டாவது அதனைச் செம்மையே கூறவல்ல மொழியாற்றல். ஒளியூட்டும் அல்லது உணர்வைத் தூண்டும் ஆற்றல் கவிதைக்கு மட்டுமே உண்டெனச் சிலர் எண்ணக் கூடும். ஆனால் வசன நடைக்கும் அவ் வல்லமை வாய்க்கப் பெறலாம்:

"நளன் கானகத்திற் காரிருளிற் காரிகையைக் கைவிட்டான். அறி அலறிக்கைவிட்டான் அது துறவறம் அன்று: அது சவிக்கொள்ளாறு. மனைவி மக்களைத் துயில வைத்து விட்டு ஓடுவது துறவன்று. அது தாம விரோதம் இயல்பாக அமைந்த சுற்றச் சூழலில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதிலேதான் தர்மம் தங்கியிருக்கிறது. தன்னைப் பற்றுக்கோடாக நம்பியிருப்பவர்களைத் தவிக்கச் செய்வது தர்மக்கேடு. தர்மந்தான் எல்லா வகையான நன்மைகளுக்கும் மூலவேர். அது கெட்டுவிட்டால் யாதொன்றுஞ் சித்திக்காது. மனைவி மக்களைக் கைவிட்டோடுவது துறவென்று நினைப்பது பெரிய தவறு. தவறுகளை— அழுக்குகளைத் துறப்பதே துறவு."

"கண்ணப்பர் கண்டறியாததைக் கண்டார். அன்னையையும் அத்தனையும் அவர் அன்றே நீத்தார். அன்றாடு அவரிடத்தார் ஆசாரத்தை மட்டுமே அவர் நீக்கவில்லை. உலகம் நீங்கிவிட்டது. கண்ணப்பருக்கு அது தெரியாது. இராக்காலத்தை நாம் நீக்குவதில்லை."

பண்டிதமணி எழுதியுள்ள மேற்கண்டபகுதிகள் அவருடைய நடையின் இனங்காணவுதவும். எடுத்துக்கொண்ட கருத்துக்கள் வாசகர் மனதிற் பதியும் வகையிற் கூறப்பட்டுள்ளன. உணர்வையும் சிந்தனையையும் தூண்டும் ஆற்றல் வாய்ந்த நடை. கருத்துச் செறிந்த சிறு வசனங்கள். வாசிப்பதிலும் புரிந்துகொள்வதிலும் சிரமமில்லை. வசனங்கள் நின்றும் தொடர்ந்தும் கரும் பொருள் னமானது ஆனால், கனம் தோன்றவில்லை. சில வார்த்தைகளிலே, சில வசனங்களிலே, மயக்கமேற்படாவகையில் ஆணித்தரமாக அறுத்துறுத்துக் கூறுவது பண்டிதமணியி பாணி.



பண்டிதமணி அவர்கள்

நாவலர் சி. வை. தாமோதரம்பிள்ளை, குமாரசுவாமிப் புலவர், விபுலாநந்தர் முதலானவர்களிடத்துப் பற்று மிகுந்தவரெனினும் பண்டிதமணியாருடைய நடையினையும் பிரதிபண்ணலோ பின்பற்றவோ எத்தனிக்கவில்லை. யாரையாவது பின்பற்ற முனைபவர் ஒரு நடையினை வளர்த்துக் கொள்ளல் இயலாது என்று இலக்கியத் திறனாய்வாளர் கூறுவர். பண்டிதமணி வகுத்துக் கொண்டது அவருக்குரிய நடை. சபாபதி நாவலரைப் பற்றிய அவரது கூற்றிலிருந்து வசன நடை எளிமையானதாக அமையவேண்டுமென்ற அவரது கருத்துப்புலனாகும்.

சொல்லலங்காரங்களிலோ எதுகை மோனை அடுக்கு வசனங்களிலோ அவருக்குச் சற்றும் நாட்டமில்லை. வசன நடை வாசிப்பதற்கரியதேயன்றிக் கேட்பதற்குரியதல்ல; செவிக்கின்பம் நோக்கியதல்ல என்பதை அவர் அறிந்திருக்கிறார். பொருளையே அவர் பிரதானமாகக் கருதினார்.

'உயிருள்ள உடலே இயங்கும்; நிலைக்கும். அவ்வாறே பொருளுள்ள இலக்கியங்களே, கவிதைகளே வழங்கும்; நிலைக்கும். பொருளற்றவைகள் பிணங்கள். அவைகள் காலவெள்ளத்துடன் கரந்து இருந்த இடமுந் தெரியாமற் பெயரும்வழங்காமல் மறைந்து போகும்'. என அவர் தெளிவாகவே கூறியுள்ளார்.

ஓர் ஆசிரியன் வசனநடையினை உன்னதமாக அமைக்குமிடத்துக் கவிதையின் எல்லையுட் பிரவேசித்து விடக் கூடும். அத்தகைய ஒரு தன்மையினைப் பண்டிதமணி எழுதியுள்ள சிவகாமி சரிதையிற் பார்க்கலாம்.

'காலமோ நள்ளிருள். இடம் நடுக்காடு. கானமானது நிழல்போல நாமும் நடக்கத்தானும் நடக்கிற காடு அந்தக் காடு. எல்லாம் இருண்மயம். இடையிடையே சிறிய சிறிய ஒளிகள்; பாம்புகளின் வாயிலிருந்தும், ஆனைகளின் தந்தங்களிலிருந்தும், புலிகளின் கண்களிலிருந்தும் வருகிற ஒளிகள் அந்த ஒளிகள். இந்த ஒளிகளுக்கும், ஆகாயத்திலே கண்சிமிட்டுகின்ற தாரகைகளுக்குஞ் சந்துபேசி அங்கும் இங்கும் பந்தம் பிடிக்கின்றன மின்மினிகள். எங்கும் மௌனம் ஏகாந்தப் பெருங்கானகம். அங்கே 'மனிதன்' என்ற வார்த்தைக்கு இடமேயில்லை. உலகம் வேறு, இந்தக் காடு வேறு'

ஒளியூட்டும், உணர்வூட்டும், வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட மறை பொருளுணர்த்தும் இதனைக் கவிதை என்றே கூறலாம்.

சில கருத்துக்களைப் படிப்போர் உள்ளங்களில் உறைக்கும் விதத்தில் ஓரே வழிப் 'பொடி' வைத்தும் எழுதுவது பண்டிதமணியின் ஓர் இயல்பு என்பர். சீவகசிந்தாமணி என்ற கட்டுரையிலே சீவகன் பொய்த்துறவைப் புணைந்து செல்கின்ற சீவகசிந்தாமணியைச் கிறந்த இலக்கியமெனக் கூறிய உ. வே. சாமிநாதையரைச் சாடிப் பண்டிதமணி எழுதியதை ஓர் உதாரணமாகக் காட்டலாம்.

தமிழ்த் தாத்தா இப்படி உரைப்பாராயின் பொய்ம்மையில் சுவை காண்பாராயின் இவித் தாய்நாட்டு நிலையை ஆராய்வதிற் பயனில்லை. பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குவது புண்மையாமன்றிப் புலமை ஆகாதே. தாய்நாடு செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் சமரசம் பண்ணிச் சாம்பார் பண்ணுகின்றது. பொருளைப் பற்றிய சிந்தனையற்ற சாதாரண கவிஞனும் தெய்வப்புலவர் திருவள்ளுவரும் இன்றைய தாய்நாட்டுக்கு ஒரு பண்டந்தான்.

பண்டிதமணியிடம் காணப்படும் நகைச்சுவையும் அவருக்கே உரிய இயல்பினது:

விஞ்ஞானங் கதித்த இந்த எந்திரவுலகத்திலே மனிதன் வெறும் எந்திரமாய் விட்டான். நாயாய் அலைகிறான்; பேயாய்த் திரிகிறான். எண்சாணுடம்புக்கு வயிறே பிரதானமாய் விட்டது. உணவுப் பிரச்சினை, சிக்கனப் பிரச்சினை முதலியன இன்றைய பேச்சாய் விட்டன; இனி வருங்கால மனிதனுக்குச் சிரிப்பு வராது; அது கொட்டாவியாய் மாறிவிடும் போலத் தெரிகிறது.

இதனைப் படிக்கும்போது சிரிப்பு வருகிறது. ஆனால் இது வெறுமனே சிரிக்க வைக்க எழுதப்பட்டதல்ல, சிந்தனையைத் தூண்டுவது.

பண்டிதமணிக்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தினால் 'இலக்கிய கலாநிதி என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டதையொட்டி வெளியிடப்பட்ட பாராட்டு விழா மலரில் ஏலவே யாம் கூறியதை இங்கு மீண்டும் கூறுதல் ஏற்புடைத்தாகும்.

பண்டிதமணியின் கட்டுரைகளைப் படிக்கும்போது பல வேளைகளில் எமக்கோர் ஆசங்கை தோன்றும். எம்மை வசீகரிப்பது அவர் கூறும் கருத்துக்களா அல்லது அவற்றை அவர் கூறும் முறையா என்பதுவே அதுவாகும். அது பண்டிதமணியின் உள்வத்தில் உண்மை ஒளி உண்டான சிறப்பு. அவ்வொளி அவரது வசனநடையிலும் தவழ்கிறது. சிறு சிறு வசனங்களிற காத்திரமான கருத்துக்களைப் பதனிடும் பண்டிதமணியின் ஆற்றல் இலேசிற்கைவரத் தக்கதன்று.

(ஈழத் தமிழ் வசனநடை வரலாற்றிற பண்டிதமணி என்ற கட்டுரையின் ஒரு பகுதி.)

பேராசிரியர் சி. தில்லைநாதன்
(தமிழ்த்துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக் கழகம்.)

பண்டிதர் ஐயாவின் நினைவுப்பணிகள்

நாவலர் மரபினை விளக்க வந்த நல்லறிவுச் சுடராகப் பிரகாசித்த பண்டிதமணி அவர்களின் நினைவாக பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை பல பணிகளை ஆற்றி வருகின்றது.

இதில் ஒரு நடவடிக்கையே இறு நடைபெறும் நூல் வெளியீடும் நினைவுமலர் வெளியீடும் ஆகும்.

பண்டிதமணி தினத்தை ஒட்டி வருடாவருடம் நினைவுப் பேருரை ஒன்றை நடத்துவதும் நூல் வெளியீட்டுச் சபையின் திட்டங்களில் ஒன்றாகும்.

பண்டிதமணி அவர்களின் நினைவாக பல்கலைக் கழகமட்டத்தில் பல்வேறு முயற்சிகளைப் படிப்படியாக எடுக்க வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையில் புலமைப் பரிசிலையோ பாடரீதியாக விஷேட பரிசி யோ வழங்க நிதியைச் சேகரித்து வங்கியில் முதலீடு செய்து அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு இவற்றைச் செய்ய வேண்டும்.

பண்டிதமணியின் எண்ணங்கள் நிறைவுபெறத் தொடர்ந்து சகலரதும் ஒத்துழைப்பையும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை வேண்டிநிற்கிறது.

அ. பஞ்சாட்சரம்
(காரியதரிசி, பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை)

கற்றோரின் கருவூலம் செந்தமிழ்க்களஞ்சியம்

கற்கண்டோ சர்க்கரையோ நறிய தேனோ
கவினுறும் தமிழதனின் சுவையை அள்ளி
சொற்கொண்டல் பண்டிதமா மணியாம் ஐயா
துளக்கிமுடி கையசைத்துக் கூறி நிற்பார்
அக்கொண்டல் நினைவாக விழாவெடுத்து
அழகான மலரொன்றும் அதில் ஏற்றி
மகிழ்கின்ற பதம்பெணும் மார்க்கம் போற்றும்
மாணவர்நாம் என்புகுகி உவிளோம் ஐயா!

களஞ்சியத்திற் பொருள்சேர்ப்பர் பலபேருள்ளர்
காலத்தால் அவையாவும் அழிந்து போகும்
களஞ்சியத்திற் கட்டுரைகள் சேர்த்தார் ஐயா
காலமெலாம் செந்தமிழின் ஊற்றாய் நிற்கும்
களஞ்சியத்தில் உள்ளபெரு நிதியை எல்லாம்
கற்றோர்க்கு வழங்கிடவே கருத்துக் கொண்டு
களஞ்சியமாம் செந்தமிழை வெளியிட்டுள்ளோம்
கருதரிய தமிழினொடு சைவம் வாழி!

பண்டிதை. பொன். பாக்கியம்
(ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.)

வாசகர் குரலுக்கு வங்கி தரும் விளக்கம்

14-8-89 திங்கட்கிழமை உதயன் 'வாசகர் திருமுகம்' பகுதியில் இடம்பெற்ற மீளக் குடியமர்வு நிதி வழங்கல் தொடர்பான கடிதத்தின் சார்பாக ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி அதிகாரிகள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்.

(i) மீளக்குடியமர்வு நிதி வழங்கல் சாதாரண வங்கி அலுவல்களுள் அடங்காத நடவடிக்கை இதனை மற்ற தனியார் வர்த்தக வங்கிகள் வழங்காததை யாவரும் அறிவர். இலங்கை வங்கி இதனை ஒரு பொதுசன சேவையாகக் கருதி பெரும் சிரமத்தின் மத்தியில் செய்து வருகின்றது.

ii) இதுவரையில் யாழ்ப்பாண, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுள் அடங்கும் 25 கிராமசேவைப் பிரிவுகளைச் சேர்ந்த 27,272 குடும்பங்களுக்கு நிவாரண நிதியை இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை மட்டும் வழங்கியுள்ளது.

iii) குறிப்பிடப்பட்ட தினமான 11 8 89 (வெள்ளிக்கிழமை) நாம் திருநெல்வேலி கிழக்கைச் (J/55) சேர்ந்த குடும்பங்களுக்கு மட்டும் வழங்க அப்குதி கிராமசேவையாளர் மூலம் ஏற்பாடு செய்திருந்தோம்.

iv) சில பத்திரிகைகளில் வேறு வங்கிகள் அறிவித்த 'இறுதி நாள்' என்ற அறிவித்தல் மக்களை கலவரப்படுத்தி விட்டது. அதனால் அன்று (11. 8 89) எல்லாப்பகுதி மக்களும் எமது வங்கியின் முன் கூடத்தொடங்கினர்.

v) மக்களை ஏமாற்றக் கூடாது என்பதை மனதில் கொண்டு நாம் கூடிய அளவிற்கு மக்கள் எல்லோருக்கும் கொடுப்பதாகும். அறிவிக்கப்பட்ட (J/55) தொகுதிக்கும் நிதி கொடுப்பனவு செய்யத் தீர்மானித்தோம்.

vi) நேரம்போதாமையால் மற்றைய தொகுதிக்கொடுப்பனவுகளை நிறுத்திவிட்டு குறிப்பிட்ட தொகுதிக் (J/55) கொடுப்பனவுகளை மட்டும் 12.00 மணிக்கு பின்னர் மேற்கொண்டோம்.

நெருக்கடி மிகுந்த இக்காலகட்டத்தில் எத்தனையோ இடர்களுக்கிடையில் எம்மால் முடிந்த அளவு சேவையை மக்களுக்கு திட்டமிட்டு வழங்கி வருகின்றோம். இவ்வாறான நேரத்தில் தகாத இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் மன வருத்தத்திற்குரியவை.

BEACON STUDY CENTRE
உடுப்பிட்டி.
முன்னைய பாட நேர அட்டவணைப்படி சகல வகுப்புக்களும்
ஆரம்பம்: 21. 08. 1989
திங்கள் காலை 7. 00 மணி
விபரங்களுக்கு கல்வி நிலையத்தில் தொடர்பு கொள்ளவும்.
(1654)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான
★ கம்பியூட்டர் கல்வி ★
Computer Programming In Basic Language
ஆரம்பம்: 26-08 1989
(சனி, ஞாயிறு வகுப்புகள்)
பயிற்சிக்காலம்: 3 மாதம்
Computer Programming in d Base IV
ஆரம்பம்: 24-08-1989
(செவ்வாய், வியாழன்)
பயிற்சிக்காலம்: 2 மாதம்
சேரும்பொழுது செலுத்த வேண்டியது
ரூ. 500/- மாத்திரம்
O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும். பயிற்சி முடிவில் (DIPLOMA) சான்றிதழ்கள் வழங்கப்படும்.
குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுப்பதிவு செய்யவும்.
விண்ணப்ப முடிவு நாள் :3-08-1989
UNIKCO COMPUTER CENTRE
இல. 5 மின்சார நிலைய வீதி,
2-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற்கந்தோர் அருகாமை) (C/3511)

வடக்கு - கிழக்கில்

சமாதானத்தை ஏற்படுத்தி அதிகாரத்தை பரவல் செய்வோம்

ரஞ்சன் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 20

வடக்கு - கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துமுகமாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சமாதானக் கமிட்டியில், தமிழ், அரசியல் கட்சிகளிலிருந்தும், தமிழ்ப் போராளிகள் குழுக்களிலிருந்தும் தலா இரண்டு பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர்.

வடக்கு - கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தி அதிகாரப் பரவலாக்கத்திற்கும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா.

புதுடில்லி யோசனைகள் குறித்துச் சபையில் நடந்த விவாதத்துக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு சொன்னார்.

"அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., பாலோ, புளொட், ஈ. என், டி. எல். எப்., தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய சகல பிரிவுகளில் இருந்தும் தலா இரண்டு பிரதிநிதிகள் என்ற அடிப்படையில், ஓர் அமைச்சரின் தலைமையில் குழு ஒன்றைக் கூட்டி குழுக்களுக்கிடையிலான பகைமையை நீக்கி வடக்கு - கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும்" - என்று அமைச்சர் கூறினார்.

முஸ்லிம்களை அழைக்க வேண்டுகோள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஜனாப். எம். எச். எம். அஷ்ரப் சபையில் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த 40 வருட காலமாக சிங்களப் பேரினவாதம் இந்நாட்டு சிறுபான்மை சமூகங்களை நசுக்கி வந்ததன் விளைவுதான் தற்போதைய பிரச்சினைக்கு பிரதான காரணம்.

இனிமேல் நடைபெறும் சகல பேச்சுவார்த்தைகளுக்கும் முஸ்லிம்களும் அழைக்கப்பட வேண்டும். இனிமேலும் பழைய பிழைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கு ஒன்றாக இணைக்கப்பட்டதனால் கிழக்கில் 33 சதவீதமாக இருந்த முஸ்லிம் சமூகம் இன்று 17 சதவீதமாகக் குறைந்திருக்கின்றது. ஆயுதம் தாங்கிய தமிழ் போராளிக் குழுக்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதை நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். இதனடிப்படையில் முஸ்லிம்களும் பேச்சுக்கு அழைக்கப்பட வேண்டும் இல்லையேல் முஸ்லிம் இளைஞர்கள் தாங்களும் ஆயுதம் ஏந்த வேண்டுமென்ற தவறான வழிக்கு இட்டுச் செல்லப்படலாம்.

சமூக அடிப்படையிலான உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உருவாக்கி அவற்றை ஒன்றுபடுத்தி முஸ்லிம் மாகாண சபை ஒன்றை உருவாக்க வேண்டும்.

— இவ்வாறு ஜனாப் அஷ்ரப் கூறினார்.

அடுத்து உரையாற்றிய ஐக்கிய சோஷலிச முன்னணி உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார பேசுகையில், தமிழ் சிங்கள மக்களை ஜனநாயக அடிப்படையில் ஐக்கியப்படுத்தி ஏகாதிபத்தியத்தை முறியடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சிறிமாவோவுக்கு அழைப்பு

முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் துணை அமைச்சர் ஜனாப் ஜாபீர் ஏ காதர் பேசுகையில், 'திருமதி பண்டாரநாயக்கா எங்களுடன் புதுடில்லிக்கு வந்து இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைக்க உதவ வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

அப்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. ஸ்டான்லி திலகரட்ன (கிண்டலாக)

நீங்கள் ஆபத்தான பேர்வழிகள். உங்களை நம்பி எங்கள் தலைவியை புதுடில்லிக்கு அனுப்ப முடியாது - என்றார்.

இன்னும் ஒரு சந்தர்ப்பத்தில் அவர் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவைப் பார்த்து 'புதுடில்லி சென்றிருந்த உங்களுக்கு, மலைவி மக்களுக்கு அன்பளிப்புகளை வாங்குவதற்கு ஒய் விருந்ததா?' என்று கேட்டார்.

அப்பொழுது குறுக்கிடு செய்த திருமதி பண்டாரநாயகா 'இலங்கைக்கு இந்தியப் பொருள்களை இந்த நேரத்தில் அமைச்சர் எடுத்து வருவாரா?' என்று குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈ. பி. ஆர். எல். எப். அணியைச் சேர்ந்த திரு. சாம் தம்பிமுத்து பேசுகையில் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தமிழ் மக்களை ஏமாற்றியதனால் தான் இன்று இப் பிரச்சினை இந்தளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது. தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கை ஆயுதப் படைகளின் மீது எவ்வித நம்பிக்கையும் இல்லை. [illegible] தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்த பின்னர் இந்திய அமைதிகாக்கும் படையை இங்கிருந்து வெளியேற்றலாம்- என்றார்.

அநாவசியமாக பகைத்தல் ஆகாது

ஈழவர் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த திரு. வேலாயுதம் கைலாசபிள்ளை தமது உரையில் கூறியதாவது:-

சிங்கள மக்கள் நல்லவர்கள் நல்ல பண்புள்ளம் கொண்டவர்கள் ஆனால், சிறுபான்மையோரின் உரிமைகளை கொடுப்பதில் மாத்திரம் மகா பெரும் கருமிகளாக இருக்கிறார்கள்.

இந்தியா தமிழர்கள் மீதோ சிங்களவர்கள் மீதோ அன்பு வைத்து இங்கு வரவில்லை. தங்களின் பாதுகாப்பிற்கு உதிதரவாதம் அளிக்குமுகமாக இலங்கை மண்ணில் வேறு நாட்டு இராணுவம் எதுவும் வருவதைத் தடுப்பதற்காகவே இங்கு வந்துள்ளது.

எனவே நாம் இந்தியாவை அநாவசியமாக பகைத்துக் கொள்ளாமல், பிரச்சினைகளை இராஜதந்திரமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் - என்று கூறினார். (அ-5)

புனித அந்தோனியாருக்கு கூறும் நன்றிச் செபம்

புனித அந்தோனியாரின் வேண்டுதலினால் நான் கேட்ட காரியம பூர்த்தியாகிவிட்டது. தேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்; அவர் வழியாக இவ்வரத்தை எமக்கு அளித்த இறை பிதாவைப் புகழ்ந்து பாடுகின்றேன். இன்றும், என்றும் அவர்க்கு நன்றியாக இருப்பேன். இதை வாசிக்கும் சகோதரர்களே! உங்கள் வாழ்க்கையில் நீங்கள் விரும்புவது, நம்பி இருப்பது வேறு எந்தக் காரியத்தையாவது புனித அந்தோனியார் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

கேளுங்கள் தரப்படும் என்று யேசு கூறியுள்ளார். நீங்களும் உண்மை விசுவாசத்துடன் மன்றாடிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நன்றி.
(1648)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெனுஷிரின் இந்திய விஜயம்

இஸ்லாமபாத், ஆக 19

பாகிஸ்தான் பிரதமர் பெனுஷிர் புட்டோ வருகிற அக்டோபர் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இந்த மாதம் பெனுஷிர் இந்தியா விஜயம் செய்வதாக இருந்தது.

அக்டோபர் 18 முதல் 24 வரை கோலாலம்பூரில் காமன்வெல்த் மாநாடு நடக்கிறது. அதில் கலந்து கொண்டு திரும்பும் வழியில் பெனுஷிர் புதுடில்லி செல்வார். (எ)

இந்திய பொதுத் தேர்தல் எப்போது?

பெங்களூர் ஆக 19

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்.

இத்தகவலை பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று பெங்களூரில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் வெளியிட்டார்.

அரசமைப்புச் சட்டத்திற்கு இணங்க உரிய காலத்தில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்றும் திரு. காந்தி சொன்னார். (எ)

● பரவி வரும் இன உணர்வைக் கட்டுப்படுத்த

சோவியத் மாநிலங்களுக்கு கூடுதல் சுயாட்சி

கிரெம்ளின் தலைமையின் அவசர நடவடிக்கை

மாஸ்கோ, ஆக 19

சோவியத் யூனியனில் உள்ள இருபது மாநிலக் குடியரசுகளுக்கு கூடுதல் சுயாட்சி அதிகாரங்களை வழங்க கிரெம்ளின் தலைமைப்பீடம் முன்வந்திருக்கிறது.

சோவியத் சம்மேளனத்தில் ஏற்படவுள்ள தீவிர மாற்றங்கள் என்ற தலைப்பிலான திட்டம் ஒன்றை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இது சம்பந்தமாகத் தயாரித்துள்ளது.

இப்போது சோவியத் மாநிலங்களில் பரவி வரும் கூடுதல் சுயாட்சி மற்றும் தனிநாட்டுக் கோரிக்கைகள் சம்பந்தமான பிரச்சினைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இதைத்தவிர வேறு வழி இல்லை என்று சோவியத் மத்திய தலைமைப்பீடம் கருதுகிறது.

கூடுதல் சுயாட்சி அதிகாரம் யோசனைகளை உத்தியோகபூர்வ டாஸ் செய்திஸ்தாபனம் வெளியிட்டுள்ளது

மாநிலங்களில் வாழும் மக்களிடையே இன உணர்வு அதிகரித்து வருவதை சோவியத் அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

வேலை நிறுத்தம் செய்யும் உரிமை

இதே வேளையில்— தொழிலாளருக்கு வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை வழங்க சோவியத் அரசு தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமான சட்ட மூலம்ஒன்றுவிரைவில்நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக தொழிற்சங்கப் பத்திரிகை 'ட்ருட்' தெரிவித்திருக்கிறது.

தொழில் தகராறுகளில் கடைசி நடவடிக்கையாகவே வேலை நிறுத்தம் இருக்க வேண்டும் என்று சட்ட மூலம் வலியுறுத்துகிறது.

நிர்வாகத்திற்கு ஐந்துநாள் முன்னறிவித்தல் கொடுத்த பின்னரே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும்.

ஆனால் பொதுப் போக்குவரத்து, சிவில் விமானப் போக்குவரத்து, தொலைத் தொடர்பு எரிசக்தி, பாதுகாப்பு, நீதித்துறை, தேசியப் பாதுகாப்பு, அரசாங்கம் ஆகியவற்றின் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யமுடியாது என்றும் சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

'செர்னோபில்' பாணி அணு விபத்து கல்பாக்கம் அணு உலையில் ஏற்படாது!

சென்னை ஆக 19

சோவியத் யூனியனில் இடம் பெற்ற செர்னோபில் அணு விபத்து போன்ற ஒன்று சென்னை கல்பாக்கம் அணு சக்தி நிலையத்தில் இடம் பெறாது.

கல்பாக்கத்தில் உள்ள இந்திராகாந்தி அணு ஆராய்சி நிலையத்தைச் சேர்ந்த நிபுணர் டாக்டர் சி. வி. சோபிநாத் இத்தகவலை வெளியிட்டார்.

அடையாறுமற்றும் சென்னை மத்திய ரோட்டரிச் சங்கங்களின் ஆதரவில் நடைபெற்ற "தமிழ் நாட்டில் அணுசக்தி" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் டாக்டர் சோபிநாத் பேசினார்.

செர்னோபில் அணு உலையிலும் பாரிக்க கலப்பாக்கம் அணு உலையில் விபத்துக்கள் ஏறபடாமல் பாதுகாக்கும் சாதனங்கள் அதிகமாக பொருத்தப்பட்டுள்ளன. அதனால் எந்த மோசமான விபத்தும் ஏற்பட வாய்ப்பில்லை

கதிரியக்கம் மனித இனத்துக்கு புதிது அல்ல.

சுற்றுப்புறச் சூழலிலும் மனித உடலிலும் இத்தாக்கங்கள் உண்டு ஓரளவு கதிரியக்கத்தைத் தாக்குப் பிடிக்கும் சக்தி மனித இனத்திற்கு உண்டு.

இயற்கையான கதிரியக்கத்திலும் பார்க்க அணுமின் உலையில் இருந்து வரும் கதிரியக்கம் இரண்டு சதவீதமே அதிகம். இப்படி டாக்டர் சோபிநாத் தெரிவித்தார். (எ)

'விசுவாமித்திரர்' வழக்கில் வியாழக்கிழமை தீர்ப்பு

"பிரம்மரிஷி விஸ்வாமித்திரர்" படத்தில் ஆந்திரமாநில முதலமைச்சர் என். ரி. ராமராவ் நடிப்பதற்குத் தடை விதிக்கும்படி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது தீர்ப்பு வழங்குவதை ஆந்திர மாநில மேல் நீதிமன்றம் வருகிற வியாழக்கிழமைக்கு ஒத்திவைத்தது.

திரு. ராமராவ் விஸ்வாமித்திரர் படத்தை தெலுங்கிலும் ஹிந்தியிலும் தயாரித்து வருகிறார்.

விஸ்வமித்திரராக ராமராவுத் மேனகையாகமிஞ்சிகிரேஷாம் திரியும் சகுந்தலையாக சுபர்ணாவும் நடித்து வருகின்றன.

முதல்- மச்சராக இருந்து கொண்டு படங்களில் திரு: ராமராவ் நடிப்பது அரசமைப்புக்கு முரணானது என்று மனுக்களைத் தாக்கல் செய்தவர்கள் நீதிமன்றத்தில் வாதடினார்கள். (எ)

உலகின் மிகப்பெரிய பனிமலை இரண்டாக உடைந்தது!

வாஷிங்டன், ஆக: 19

உலகிலேயே கடலில் மிதக்கும் மிகப் பெரிய பனிக்கட்டிப்பாறை ஒன்று உடைந்து விட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்டார்க்டிக்காவின் அருகில் அடேய்ர் முனையில் இருந்த இப் பனிக்கட்டிப்பாறைக்கு "பி-9" என்று பெயர்.

அன்டார்க்டிக்கா கண்டத்தில் இருந்து 1987 ஆம் ஆண்டு அக்டோபரில் இப் பனிக்கட்டிப்பாறை பிரிந்தது.

ஆரம்பத்தில் இப் பனிமலையின் நீளம் 159 கிலோ மீற்றராகவும் 40 கிலோ மீற்றர் அகலமாகவும் இருந்தது.

உலகின் மிகப்பெரிய பனிக்கட்டிப்பாறை என்ற பெயருடன் இரண்டு ஆண்டுகள் மட்டுமே இது விளங்கியது.

இப்போது உலகின் மிகப பெரிய பனிமலை "ஏ-23" என்று அழைக்கப்படுவதாகும். இதன் விஸ்தீரணம் 3 ஆயிரத்து 700 சதுர கிலோ மீற்றராகும்.

தென் அமெரிக்காவிற்கும அன்டார்க்டிக்காவிற்கும் இடையில் உள்ள இப் பனிமலை மிதக்கிறது. (எ)

கருணாநிதியை ஏன் வணங்கினேன்?

காளிமுத்து தரும் புதுமை விளக்கம்

கம்பம், ஆக 19

அ. தி. மு. க. வில் மீண்டும் சேருவதற்கு முன்னர் முன்னாள் அமைச்சர் காளிமுத்து என் வீட்டிற்கு வந்து என்னை வணங்கினார் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியிருந்தார் அல்லவா!

அதற்கு திரு. காளிமுத்து கம்பம் நகரில் நடந்த அ.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் சூடாகப் பதிலளித்தார்.

திரு. காளிமுத்து சொன்னதாவது:

நான் எங்கோ போய்ச் சேர்ந்து விட்டேன் என்று கருணாநிதி திட்டுகிறார்.

எங்கே போய்ச் சேர்ந்து விட்டேன்? ஜனதா தள்த்தில் சேர்ந்து விட்டேனா? இல்லை தெலுங்கு தேசத்தில் சேர்ந்து விட்டேனா?

என்னை வளர்த்த இயக்கத்தில் 10 ஆண்டுகாலம் என்னை அமைச்சராக வைத்திருந்த புரட்சித் தலைவரின் இயக்கத்தில் சேர்ந்திருக்கிறேன். புரட்சித் தலைவியை நான் விமர்சனம் செய்திருக்கிறேன். விமர்சனம் செய்த என்னைக் கட்சியில் சேர்த்துக் கொண்டு என்னைத்துணைப் பொதுச்செயலாளர் ஆக்கி இருக்கிறார். புரட்சித் தலைவி ஜெயலலிதா!

விமர்சனம் செய்த அண்ணன் வீரப்பனை கட்சியில் சேர்த்துக் கொண்டு அவரை இணைப் பொதுச் செயலாளர் என்று அறிவிக்கிறார்.

கட்சியைக் கட்டிக்காக்க வேண்டும் என்ற பெருந்தன்மை புரட்சித் தலைவி ஜெயலலிதாவுக்கு இருக்கிறபோது அவரோடு சேர்ந்து என் தலைவனின் இயக்கத்தைக் காப்பதற்கு நாங்கள் தியாகம் செய்யபோவதிலே என்ன தவறு?

அம்மன்

காளிமுத்து வந்து என்னை (கருணாநிதி) வணங்கினார் என்று கூறுகிறீர்களே உங்களை வணங்கியது குற்றமா?

கோவிலுக்குப் போகிறோம். அங்கே சாமியை மட்டுமா வணங்குகிறோம். உள்ளே இருக்கிற எத்தனையோ சின்னச்சாமிகளையும் வணங்குகிறோம்.

சனீஸ்வரனை எதற்காக வணங்குகிறோம்? சனீஸ்வரனின் அருள் வேண்டும் என்பதற்கா? தயவு செய்து என்னைப் பிடித்துக் கொள்ளாதே என்பதற்காக.

அதைப்போல என்னை பிடித்து கொள்ளாதீர்கள் என்பதற்காக உங்களை வணங்கினேன்.

ஆனால், எந்த அம்மனை வணங்க வேண்டுமோ அந்த அம்மனை வணங்கி வரவேண்டிய இடத்துக்கு ஒழுங்காக வந்து சேர்ந்திருக்கிறேன்.

எப்படியாவது அடக்கு முறையை அராஜகத்தை முடுக்கி விட்டு அண்ணா தி. மு. கவை சாய்த்து விடலாம் என்று கருதினால் அது நடக்காது இங்கே லட்சோப லட்சம் லட்சிய வீரர்கள் இருக்கிறார்கள்.

எப்படிப்பட்ட அடக்கு முறை அம்புகள் பாய்ந்தாலும், தாக்குப் பிடிப்போம்.

புரட்சித் தலைவரின் ஆட்சியை புரட்சித் தலைவியின் தலையையில் கோட்டையில் ஏற்படுத்தும் வரை எங்களுக்கு ஓய்வு கிடையாது.

இவ்வாறு காளிமுத்து பேசினார். (எ)

பல்லவர் காலத்து நாணயம் திருவான்மியூரில் கண்டுபிடிப்பு

சென்னை, ஆக. 19

மிக அரிதான பல்லவர் காலத்து நாணயம் ஒன்று சென்னைக்கு அருகே திருவான்மியூரில் கண்டெடுக்கப்பட்டது.

சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்காக பள்ளிக்கூட வளவு ஒன்றில் குழி ஒன்று தோண்டப்பட்டது. அப்போது ஈயத்தினாலான இந்த நாணயமும் வெளிப்பட்டது: நாணயத்தின் ஒருபக்கத்தில் 'எருது' சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

பல்லவர்களின் ராஜ சின்னம் (Royal Crest) 'எருது' என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி 3 – 6ஆம் நூற்றாண்டு காலத்தில் தமிழகத்தை பல்லவ மன்னர்கள் ஆண்டு வந்தனர்.

பல்லவர் காலத்து நாணயங்கள் முன்னர் மகாபலிபுரம், காஞ்சிபுரம் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன:

மகாபலிபுரத்தில் கண்டு எடுக்கப்பட்டவை செம்பினாலானவை:

காஞ்சிபுரத்தில் எடுக்கப்பட்டவை ஈயத்தினாலானவை. (எ)

பழங்காலக் கார் விற்பனை

பொன், ஆக 19

மேற்கு ஜேர்மனியில் உள்ள நியூபோர்ஜிஸ் நகரில் பழைய கார் ஒன்று 5 கோடி ரூபா விலைக்கு ஏலம் போனது.

இக்கார் 1933 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

அந்த ஏலத்தில் பழங்காலத்து கார்கள் விற்கப்பட்டதால் கமார் ஆயிரம் கோடி ரூபா கிடைத்தது. (எ)

சியாச்சென் எல்லைப்பிரச்சினை மீண்டும் பாக்-இந்தியப் ரேச்சு

புதுடில்லி, ஆக. 19

சியாச்சென் பனிப்பிரதேச தகராறு சம்பந்தமாக மீண்டும் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்த இந்திய ராணுவக்குழு ஒன்று நேற்று இஸ்லாமாபாத் பயணமானது.

இராணுவத்தலைமை லெப்டினட் ஜெனரல் வி. கே: சிங் தலைமையிலான இக்குழு எல்லைப் புறத்தில் இருந்து இரு தரப்புப் படைகளும் விலகுவது குறித்து பேச்சுக்கள் நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது: (எ)

தொடர் கல்வி நிறுவனம்

[உடுவில் மகளிர் கல்லூரி]

ஆரம்பம்: 21 - 08 - 1989

1: Computer Programming
Data Processing
2. Short Hand, Type-Writing
3: National Certificate in English
4. I. A. B (Lond)
5. மனைப் பொருளியல்
(Cake-icing, HairStyle, Dress Making)

- இயக்குநர்,

(சி/3526)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

பதவி வெற்றிடங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் கீழ்க்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப் படும்:

பதவிகள்:

(1) தொழில்நுட்பவலர் தரம் II பிரிவு 'ஏ'
i கணனிப்பகுதி
ii வேலைக்கனம்/ பௌதிகவியற்றுறை

(2) தரவுப்பதிவு இயக்குனர் (அமைய)

சம்பளஅளவுத்திட்டம்:

(1) தொழில்நுட்பவலர் தரம் II பிரிவு 'ஏ' ரூபா. 2375 - 11X50 – 2925/- மாதமொன்றுக்கு

(2) தரவுப்பதிவு இயக்குனர் (அமைய) ரூபா: 79/- நாளொன்றிற்கு

தகைமைகள்:

(1) தொழில்நுட்பவலர் தரம் II 'ஏ' பிரிவு
(அ) சிறப்புத் தேர்ச்சி பெற்ற உரிய துறையில் தொழில் நுட்பவியலில் தேசிய டிப்ளோமா அல்லது அதற்கு சமனான தகைமை
அல்லது
(ஆ) அங்கீகரிக்கப் பெற்ற நிறுவனமொன்றில் தொழில் நுட்பவியலாளர் பத்தாண்டுகளுக்குப் பொருத்தமான அனுபவம்.

குறிப்பு:

(1) இலக்க இலத்திரவியல் அறிவுடன் கம்பியூட்டர் கருவிகளைப் பழுதுபார்ப்பதில் அனுபவம் உடையவர்க்குமுன்னுரிமை அளிக்கப் படும்.

(11) பொறிமுறை வேலைக்கள இயந்திரத் தொகுதியைக் கையாள்வதில் அறிவுடையோருக்குமுன்னுரிமை அளிக்கப் படும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்காக தெரிவு செய்யப் படும் விண்ணப்பதாரியின் கிறப்புத் தகைமை கணியும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:
செய்முறைப்பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.

(2) தரவுப்பதிவு இயக்குனர் (அமைய)
இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 5 திறமைச் சித்திகளுடன் க.பொ.த (சாதாரண) பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:
தரவுப்பதிவு இயக்குநராக அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:
உளச்சார்பு பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.

இப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தாபனக்கிளையில் விண்ணப்பப் படிவங்களை நேரிலும் 23×10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை யொட்டப்பெற்ற கடித உறையை அனுப்புவதன் மூலம் தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் நியதிச் சட்டசபையிலுள்ள விண்ணப்பதாரி, அரின் நிறுவனத் தலைவரின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு அனுப்பிப் பெறப்படாத விண்ணப்பங்கள், தெளிவாக குறிப்பிடாத விண்ணப்பங்கள், குறித்த திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

— பதில் பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1989 - 08 - 17

[சி-3522]

ACCOUNTANCY CLASSES NOV - DEC 1989

C. I. M. A.	A. A. T.	A. A. T	I. A. B.	I. D. P. M.
STAGE I STAGE II and STAGE III	(London) PRELIM and INTER	(SRI LANKA) STAGE I and STAGE II	Foundation INTER and FINALS	PART I and PART II Chartered Accountancy LICENTIATE I

(வகுப்புக்கள் யாவும் 05-08-89 இல் ஆரம்பமானதால் உடன் தொடர்பு கொள்ளவும்)

North Ceylon Technical Institute

14, St. Peter's Lane, Hospital Road, JAFFNA.

[சி-3519]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர்!
பல்கட்டுவதில் கைதேர்ந்தவர்!

P. I. பர்ஞண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.

உதயன்

20 08 1989 ஞாயிற்றுக்கிழமை

கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர்!
பல்கட்டுவதில் கைதேர்ந்தவர்!

கிளை:
P. I. பர்ஞண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.

வல்வையில் கைதானோர்; பிரஜைகள் குழு விளக்கம்

யாழ்ப்பாணம், ஆக:20 வல்வையில் கைதானவர்களை விசாரிப்பதுசம்பந்தமாக நிலைமையைத் தெளிவுபடுத்தி வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது. அறிக்கையின் விவரம் வருமாறு:-

கடந்த சனிக்கிழமை 'ஞாயிறு' பத்திரிகையில் இந்திய அமைதிப் படையினரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் ''கைதானவர்களை விடுவிக்க முடியாமலுக்கு, பிரஜைகள் குழுவினர், காங்கேசன் துறைக்குச் சென்று பொறுப்பெடுக்கத் தவறியமையே காரணம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

15-8-89 செவ்வாய்க்கிழமை அன்று காங்கேசன் துறை இராணுவ முகாமில் அமைதிப்படை அதிகாரிகள், ''கைதானவர்களை விடுவிப்பதற்காகக் காத்திருந்தனர்'' என்ற விஷயம் அறிந்து நாம் கைதானவர்களின் பெற்றோர்களுடன் சேர்ந்து ஆறுதல் அடைகின்றோம்.

பொதுவாக எமது சகல தொடர்புகளும் உடுப்பிட்டி இராணுவ முகாமுடனும், வடமராட்சி பிரிகேடியர் மட்டத்துடனும் மட்டுமே இருந்து வருவது வழக்கம். கைது செய்யப்பட்டவர்களை, அவர்கள் எந்த முகாமுக்குக் கொண்டு சென்றாலும், உடுப்பிட்டி முகாமில் வைத்தே விடுதலை செய்யப்படுவது வழக்கம். அதற்கிணங்க கைதானவர்களை விடுவிப்பார்கள் என்ற நம்பிக்கையில் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு, நாங்கள் உடுப்பிட்டி முகாம் சென்று, அங்குள்ள பொறுப்பதிகாரியுடன் இதுபற்றிக் கதைத்தோம். அதனால் அன்று அவர்கள் விடுவிக்கப்படவில்லை. கைது செய்து தடுப்புக்காவலில் உள்ளவர்களின் பெற்றோரின், உறுதிக் கடிதம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டதால், அவ்வாறே ஒழுங்கு செய்து மீண்டும் சனிக்கிழமை காலை யாக்கரை இராணுவ முகாம் சென்று வடமராட்சி இராணுவப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டோம். அதற்கு கைதிகளை விடுதலை செய்வதற்கு வாகன வசதியின்மையால் அன்று விடுவிக்க முடியவில்லையென்றும், அவர்கள் அனைவரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி இராணுவ முகாமில் வைத்து விடுதலை செய்வதாகவும் வாக்குறுதி அளித்தார்.

மேலும் பொலிகண்டி இராணுவ முகாமில் கடந்த இரண்டாம் திகதியிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை 15-8 89 இல் விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்தும் இதுவரை விடுதலை செய்யாது, அவர்களையும் காங்கேசன்துறை இராணுவ முகாமுக்குக் கொண்டுசென்ற பின்னரே விடுவிக்கப்படுவர் என்று இப்பொழுது 18 நாட்களின் பின் கூறுவது பாதிக்கப்பட்ட பெற்றோருக்கு மேலும் அதிர்ச்சியையும், வேதனையையும் கொடுக்கின்றது.

இந்த நிலையில் பிரஜைகள் குழுவினர் காங்கேசன்துறைக்குச் சமுகமளிக்காத காரணத்தினால்தான், கைதானவர்கள் விடுவிக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டுவது பொருத்தமற்றது.

கடந்த பதினெட்டு நாட்களாக காங்கேசன்துறை முகாமிலும், பொலிகண்டி இராணுவ முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை மேலும் காலம் தாழ்த்தாது பெருந்தன்மையுடன் விடுதலை செய்யப்படுவார்கள் என்று நம்புகின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

ஸ்ரான்லிவீதி வங்கியில் நாளை நிவாரணப் பணம்

யாழ்ப்பாணம், ஆக 20 யாழ் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் நாளை திங்கட்கிழமை மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் பெயர் குறிப்பிடப்பட்டு பெறத் தவறியவர்களுக்கே நாளை நிவாரணம் வழங்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் அவர்கள் பகுதி கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தை பெற்று வருமாறு வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

நிவாரணம் வழங்கப்படவுள்ள கிராமசேவையாளர் பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

★ கந்தர்மடம் - 312
★ நல்லூர் வடக்கு - 138
★ திருநெல்வேலி மேற்கு - 80
★ திருநெல்வேலி கிழக்கு - 161
★ கோண்டாவில் மேற்கு - 151
★ கோண்டாவில் கிழக்கு - 253
★ கொக்குவில் கிழக்கு - 82
★ கொக்குவில் மேற்கு - 102
★ கொக்குவில் மத்தி - 122 (ஒ)

குழியுள் பிரேதம் இறக்கும் இயந்திரம்,
'டிவைஸ்' ஒப்பின் காஸ்கற்ஸ்,
குறஸ் காஸ்கற்ஸ் வகைகளுக்கு
நம்பகமான ஒரே இடம்:
பிறைற் ஹவுஸ்,
அந்திய கால சேவை
(புனித யாகப்பர் ஆலய அருகாமை)
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [தி/3197]

அரசியல் நிர்ணயசபை அமைக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கு ஏற்ப புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும்

★ பல கொலைகளுக்குக் காரணமான சட்டவிரோத ஆயுதப்படைகளை கலைக்க வேண்டும்;

★ பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட வேண்டும்;

★ இந்திய-இலங்கை ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும்;

★ மாகாணசபைகளைக் கலைக்க வேண்டும்.

★ இளைஞரைக் கொலை செய்ததற்காக பதவி உயர்வு பெற்ற அனைவரையும் ஒய்வு கொடுத்து அனுப்பவேண்டும்.

★ இந்த யோசனைகளை அமுல் செய்த பின்னர் ஏற்படக்கூடிய உகந்த சூழ்நிலையில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்த வேண்டும்.

— இந்த யோசனைகளைச் சமர்ப்பித்து திரு. பண்டார நாயக்கா பேசுகையில் பாதுகாப்புப் படையினர் முதலில் தங்கள் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அவர்களுக்குப் பதிலளித்து ஜனாதிபதி சொன்னதாவது:

இந்த யோசனைகள் எல்லாம் ஜே. வி. பி. வெளியிட்டவையாகவே இருக்கின்றன:

மக்களைக் காப்பாற்றவே அரசு பெரும் தயக்கத்துடன் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வந்தது:

வன்செயல்கள் நிற்காமல் தொடருகிறது. இந்த நிலையில் அவசரகாலச் சட்டத்தை ரத்துச் செய்ய முடியுமா?

இன்று அவசரமாகத் தேவைப்படுவது அமைதி, சமாதானமே. இதற்கு முதல்படியாக சகல குழுக்களும் வன்செயல்களை நிறுத்தவேண்டும்.

அதன்பின்னர் சகல அரசியல் கட்சிகளும், ஜே. வி. பி உட்பட, பல்வேறுயோசனைகள் பற்றி பேச்சுக்கள் நடத்தலாம்.

முன்னணி சமர்ப்பித்த யோசனைகள் பலவற்றை அமுல்நடத்துவதற்கு அரசையப்புக்குத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டியுள்ளது. இதற்குசகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்கள்நடத்தவேண்டும். இதற்கான உகந்த சூழ்நிலை உருவாக அமைதி திரும்ப வேண்டும்.

புதிய அரசமைப்புச் சட்டத்தை என்னால் மட்டும் உருவாக்க முடியாது. நாடாளுமன்றத்தில் அரசுக்கு மூன்றில் இரண்டு பங்குபெரும்பான்மை கிடையாது.

ஒரு நாடாளுமன்றம் செயல்பட ஆரம்பித்து ஓராண்டு முடிவதற்கு முன்னர் ஜனாதிபதியால் அதனைக் கலைக்கவும் முடியாது;

ஆகவே சகல அரசியல் கட்சிகளும் சேர்ந்து அரசமைப்புச் சட்டத்தை எப்படித் திருத்துவது என்பது பற்றி பரிசீலனை செய்யவேண்டும்.

எப்படி தேர்தலை நடத்துவது என்பதையும்அப்போது பரிசீலனை செய்யமுடியும்:

தேவை ஏற்படின் புதிய அரசமைப்பு ஒன்றை தயாரிக்க ஜே. வி. பி. உட்பட சகல அரசியல் கட்சிகளையும் கொண்ட அரசியல் நிர்ணயசபை ஒன்றையும் அப்போது நியமிக்கமுடியும்.

ஆகவே முன்னேற்ற முன்னணி தீவிரவாதிகளுடன் அதற்குள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட தினத்தில் இருந்து வன்செயல்களை நிறுத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும்:

யார் மீதும் குற்றம் கண்டு பிடிப்பதற்கு இது நேரமல்ல; இன்று தேவை வன்செயல்களை நிறுத்துவதே:

வன்செயல்கள் நிறுத்தம் பாதுகாப்புப் படையாலும் தீவிரவாதிகளாலும் ஒரே சமயத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டும்;

இதனை முதலில் ஒரு வாரத்திற்கு அல்லது அதற்குக் கூடுதலாக அமுல் நடத்தலாம்; இதன் மத்தியில் அமைதியைக் கொண்டு வருவதற்கான யோசனைகள் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்கலாம்;

ஆகவே சமாதானம் திரும்ப ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தில் கொடுங்கள்;

—இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா, இலங்கை முன்னேற்ற முன்னணித் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

இத்தகவல்கள் அனைத்தும் ஜனாதிபதி செயலகத்தால் நேற்று வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

தெற்கில்...

மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாக ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரும் சுவரொட்டிகளும் கொழும்பில் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன. ஜே. வி. பி. உறுப்பினர்கள் பலர் அரச படைகளினால் சுட்டுக் கொலைப்பட்டதைக் கண்டித்தே ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி அந்த சுவரொட்டிகளில் கோரப்பட்டிருந்தது;

இதேவேளை இன்று -20 ஆம் திகதிக்கு முன்னர் – பாதுகாப்புப் படையில் இருக்கும் அனைவரும் படைகளை விட்டு வெளியேறிவிட வேண்டும் என ஜே. வி. பியினர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்;

எதிரிகள் மீது சித்திரவதை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வையா? என்பதை அறிந்து கொள்ளும் ''வொயர்டயர்'' விசாரணை அன்மையில் நடந்து முடிந்தது.

நீதிபதி தனது தீர்ப்பை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

இவ்வழக்கில் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சேதம் விளைவித்தது, எயர் லங்கா விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தது, 16 பயணிகளைக் கொன்றது, 16 பேருக்குக் காயம் ஏற்படுத்தியது ஆகியவை உட்பட 38 குற்றச்சாட்டுக்கள் ஏ. குணசிங்கம், சின்னத்துரை குலசபாநாதன், ஹரிச்சந்திரன், மருதநாயகம், பாலசிங்கம் பாலசிச்சந்திரன் ஆகியோர் மீது சுமத்தப்பட்டிருந்தன.

நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்ததாவது:-

எதிரிகளின் வாக்குமூலங்கள் அவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் அளித்தவை அல்ல.

எதிரிகள் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு, பின்னர் சித்திரவதை செய்யப்பட்டனர். பல வகையாலும் எதிரிகள் துன்புறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே அவர்களிடமிருந்து பலாத்காரமாக வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன —

— இப்படி நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

இக்கட்டத்தில், இரண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கப்போவதாக கிரேஷ்ட சட்டத்தரணி காந்திலால் குமாரசிறி நீதிபதியிடம் தெரிவித்தார்.

வழக்கு விசாரணையைத் தொடருவதுபற்றி பரிசீலனை செய்ய வருகிற புதன்கிழமை வரை தவணை தரும்படி அரச சட்டத்தரணி கோரினார்.

எதிரிதரப்புச் சட்டத்தரணி ஆர். இ. தம்பிரத்தினம் இதை ஆட்சேபித்தார். தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்வது பற்றி ஆலோசிக்க புதன் வரை கால அவகாசம் தரும்படி கோரும் இரண்டாவது விண்ணப்பத்தை அரசசட்டத்தரணி பின்னர் சமர்ப்பித்தார்.

நீதிபதி: [அரச சட்டத்தரணியைப் பார்த்து] எதிரிகளின் வாக்குமூலங்கள் நிராகரிக்கப்பட்டால் வழக்கைத் தொடரப்போவது இல்லை என்று பலமுறை இங்கு கூறியிருக்கிறீர்.

நீதிமன்றத்தில் ஒன்றைச் சொல்லிவிட்டு இப்போது வேறு நிலைப்பாட்டை எடுக்கிறீர்.

இப்போது சொல்வதை முன்னர் நீர் கூறியிருந்திருப்பின் தீர்ப்புடன் காரணங்களையும் நான் கூறியிருந்திருப்பேன்.

எப்படியாயினும் புதன் வரை கால அவகாசம் தர முடியாது; திங்கள் வரை தவணை தருகிறேன்—என்றார்.

பாடசாலைகள் விடயம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரையின் பிரகாரம் வடகிழக்கு மாகாணப்பாடசாலைகள் திறக்கப்பட்டும், கிழக்கில் முழுமையாகவும், வடக்கில் மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நொண்டிச்சாட்டை முன்வைத்து ஏற்படுத்திய பயமுறுத்தல் காரணமாக ஒரு பகுதி மாணவர்களும் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்காமலும் இருந்து வருகின்றனர்:

யாழ் மாவட்டத்திலுள்ள சகல தனியார் கல்வி நிலையங்களும் திறக்கப்பட்டு, முன்னிலும் பார்க்க அதிகமான மாணவர்கள் அக் கல்வி நிலையங்களில் கல்வி பயின்று வருவதையும் எம்மால் நிதர்சனமாகக் காண முடிகின்றது: இதே சமயம் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல புதிய கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்:

வடபகுதியில் உள்ள மகளிர் கல்லூரிகள் முழுமையாக நடைபெற்று வருவதும், கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய அம்சமாகும்.

இதே சமயம் ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் சிறார்களையும்கூட பாடசாலைக்குச் செல்லவிடாது தடுக்கும் நடவடிக்கையானது தமிழ்பேசும் மாணவர்களை கல்வித்துறையில் பல தசாப்தங்களுக்குப் பின்தள்ளவே உதவும் என்பதைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ளவேண்டும்;

உலகுக்கு முன்னால் தென்னிலங்கையைப் போன்ற ஒரு குழப்பமான நிலையை வடக்குக் கிழக்கிலும் நிலவுகின்றது எனக் காட்ட முனையும் இலங்கை அரசுக்கு, முட்டுக் கொடுக்க முனையும் ஒரு குழுவினரது நடவடிக்கையின் வெளிப்பாடே இத்தகைய பயமுறுத்தல்களாகும்.

இதற்கு தமிழ் மக்களும் மாணவர்களும் துணை போவார்களாயின் ''அரசை நம்பிப் புருசனைக் கைவிட்ட'' கதையாகவே முடியும் என்பதனையே இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆகவே, இன்றைய அரசியற் சூழ்நிலையில் தமிழர்களை இனரீதியாக ஒடுக்க முனைந்த அரசும் கடந்த காலத்தில் தரப்படுத்தல் மூலம் எமது மாணவர்களின் கல்வியைப் பாழடித்தும், தென்கிழக்காசியாவில் தலைசிறந்த நூலகமாக விளங்கி, தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கிய யாழ் பொதுசன நூலகத்தை தீமூட்டி எரித்தும் திருப்தியடையாத போனவாத சக்திகளும் இன்று தமிழர்களைக் கொண்டே தமிழ் பேசும் மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன என்பதைப் பொறுப்புள்ள பெற்றோர்களும், மாணவர்களும் சிந்தித்துச் செயலாற்றுமாறு வேண்டுகின்றேன்.'' — என்று உள்ளது. (ஒ)

மின் விநியோக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் குறிப்பாக அடிமட்ட விவசாய தொழிலாளர்களின் நாளாந்த சீவனோபாய வாழ்க்கை மின்தடை காரணமாக சீரழிந்துள்ளது.

ஏற்கனவே பல வழிகளிலும் தொல்லையுறும் மக்கள், மின்தடை என்பதும் அவர்கள் மீது விதிக்கப்பட்ட மறைமுக பொருளாதாரத் தடையா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது.

தெற்கிலும் கிளர்ச்சிவாதிகளே இதற்குக் காரணமென அரசதரப்பில் கூறப்பட்டாலும் அவர்கள் இதற்குப் பொறுப்பாக இல்லாதவிடத்து இலங்கை அரசுதான் இதற்குப் பொறுப்பு என்ற முடிவிற்கு நாம் வரவேண்டி நேரிடும். இவை பற்றி விவாதித்து தமிழ் பேசும் மக்கள் மின்தடை காரணமாக அடையும் சிரமங்களை நீக்க வேண்டும்; இதற்காக சமூகவர் ஜனநாயக முன்னணி இலங்கை ஜனாதிபதியையும், மின்சக்தி அமைச்சரையும் சந்திக்கக் கோரியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது; (ஒ)

மரண அறிவித்தல்கள்

திரு. விஸ்வலிங்கம் நடராஜா

கலட்டி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த திரு: விஸ்வலிங்கம் நடராஜா அவர்கள் 19-08-89 ஆம் திகதி காலமானார்; இவர் திருமதி. யோகரெத்தினம் அவர்களின் அன்புக்கணவரும், சிறீதரன் (அதிபர், கௌதாரி முனை அ. த. க. பாடசாலை) சிறிச்சந்திரமோகன் (கனடா) லலிதாதேவி (ஆசிரியை பூநகரி மகாவித்தியாலயம்) லீலாதேவி (அமெரிக்கா) சுகந்தாதேவி, யாசோதாதேவி (கனடா) சிறிரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மகாலிங்கம் (பிலிப் நரீஸிங்கோம்), சிவப்பிரகாசம் (அமெரிக்கா), குணபாலசிங்கம் (பிரான்ஸ்), கமலேஸ்வரன் (கனடா), விஜயதேவி, அன்பரசி (கனடா) கலாவாணி ஆகியோரின் அன்புமாமனாரும், இராமநாதன் பொன்னம்மா: கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசாமி, (புதுமைலோலன்) காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம், குணராஜா (செங்கை ஆழியன்-மேலதிக அரசாங்க அதிபர் கிளிநொச்சி) மகேஸ்வரி, தங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் பிரபாகரன், ராதிகா, சதீஸ், கவிதா, பிரதீபன், விஜிதா, சாரிமினி, கார்த்திகா, அவித்தா, தசாவி, பிருந்தா, பிரதிமா, சுகந்த், பிரசாந்த், அபிமன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்;

அன்னாரது புதவுடல் 20-8-89 இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து கோம்பயன் மணல் மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ந. சிறீதரன் (மகன்)
43/1, கலட்டி அம்மன் கோயில் வீதி,
யாழ்ப்பாணம். [1556]

திரு. இ. சீவரத்தினம்

யாழ்ப்பாணம் பிரபல சட்டத்தரணியும், நொத்தாரிசும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழக ஆளுனர் குழு உறுப்பினரும் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் தலைவரும் முன்னைநாள்வட மாகாணமுற்றநோய்ச் சங்க பொருளாளரும் சண்டிலிப்பாய் முருகமூர்த்தி கோவில், காவிகோவில் நிர்வாகசபை உறுப்பினரும், ஆலோசகருமான இளையதம்பி சீவரத்தினம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தங்கம்மாவின் சிரேஷ்ட புதல்வனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், திருமலர் (ஆசிரியை கண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஸ்ரீதரன் (அமெரிக்கா), சாந்தமலர் (மருத்துவ பீடம், யாழ்: பல்கலைக்கழகம்), சந்திரமலர் (வெளிவாரிப் பட்டதாரி மாணவி). திருமலர் (யாழ்/அக்கடமி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்;

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (20-08 1989) ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சண்டிலிப்பாய் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்;

தகவல்:
மனைவி மக்கள்
''தங்க வாசா''
கல்வளை ஆலங்குளாய் வீதி,
சண்டிலிப்பாய். (1562)

திரு. வே. அன்ரனி மரியதாசன்
(தவராசா)

நாரந்தனையைச் சேர்ந்த திரு: வே: அன்ரனி மரியதாசன் 17-8-89 அன்று மலேசியாவில் காலமானார். இவர் லோகியின் அன்புக் கணவரும், சஞ்சீவ் [அமெரிக்கா], றஜீவ், கஜீவ் [மலேசியா], ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பி. வேதநாயகம், காலஞ்சென்ற வில்வீனமுத்து வேதநாயகம் ஆகியோரின் அன்பு மகனும், திருமதி குலநாயகம் ஆகியோரின் அன்பு மருமகனும், மரிஸ்ரெல்லா, தேவதாஸ் [லிகிதர், நவீல்ட் பாடசாலை கைதடி], எலின், யேசுதாசன் [துருக்கி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராசா [கிராம சேவையாளர், வவுனியா], காலஞ்சென்ற சறோஜினி ஞானானந்தன் [கவிற்சலாந்து], ஞானராணி [பாகிஸ்தான்] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்;

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-8-89 ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெறும்;

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:
வே: பி. தேவதாஸ்
(சகோதரர்)
466/2B, அர்ச்சு கவாவியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்: (1558)

திரு. வேலுப்பிள்ளை செல்லையா

சரசாலையை பிறப்பிடமாகக் கொண்டவரும், பரந்தவில் வசித்தவருமாகிய திரு: வேலுப்பிள்ளை செல்லையா 19-08-89 சனிக்கிழமை மாலை காலமாகிவிட்டார்;

இவரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்;

தகவல்:
வி. ஜெயக்குமார்
20: தபால் கந்தோர் வீதி,
சாவகச்சேரி; (11769)

இப் பத்திரிகை மிடு உதயன் பப்லிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 103/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20-08-1989இல் அச்சிடு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org